# மருந்து

## சித்த மருத்துவ ஆண்டிதழ்

COPHARM

கோபாம்

கௌரவ ஆசிரியர்

வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்

வெளியீடு

சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம்

1994

# மருந்து

## சித்த மருத்துவ ஆண்டிதழ்

*கௌரவ ஆசிரியர் :* வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்

*நிர்வாக ஆசிரியர் :* வைத்தியச்சாரிணி பா. இராதாதேவி

*வெளியீடு:* சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம்

# MARUNTU

## ANNUAL SIDDHA MEDICAL JOURNAL


*Honorary Editor :* **Vaidya Peraringnar Dr. K. Balasubramaniam**
*Honorary Special Advisor - Copharm*
*Chairman, Siddhaa Medical Research Centre*

*Administration Editor :* **Vaidyachariny Dr. B. Rathadevy**
*Managing Director - Copharm*

*Published by* **Siddha Medical Co-operative Society Ltd.**
*572, Hospital Road, Jaffna*

## சர்வதேச

# மருத்துவ இலச்சினை




**இலங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றத்தினால் சர்வதேச சித்த மருத்துவ இலச்சினையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.**


உருவாக்கம்

வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்

தவிசாளர்



சர்வதேச கூட்டுறவாளர் தின சிறப்பு வெளியீடு

7 - 7 - 1994

விலை 15/-



# வடக்குக் கிழக்கு மாகாண ஆயுர்வேதப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

பூ. உரோமகேசுவரன்
*மாகாண ஆயுள்வேதப் பணிப்பாளர்.*
*சுகாதார மகளிர் விவகார அமைச்சு,*
*வடக்கு கிழக்கு மாகாணம்*

இந்த கோபாம் கூட்டுறவு சித்த மருந்துச்சாலையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி மருத்துவ சஞ்சிகை ''மருந்து'' என்ற பெயரில் வெளிவருகின்றது. சித்த வைத்தியத்துக்கும் மக்களுக்கும் இடையே இது ஒரு பாலமாக அமையும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். இக் கூட்டுத்தாபனத்தில் தயாரிக்கப்படும் மருந்துகளின் பெயர்களுடன் அதில் சேர்ந்துள்ள முக்கிய மூலப் பொருட்களின் அளவுப் பிரமாணமும் குறிக்கப்பட்டுள்ளதுடன் எந்தெந்த அளவில் எந்தெந்த நோக்கங்களுக்குக் கொடுத்துக் குறிப்பிட்ட நிவாரணங்களை பெறலாம் என்பதுபற்றியும் உள்ளடக்கிய ஒரு நூலாக இச்சஞ்சிகை அமைகின்றது. இது பொதுமக்களுக்கு மட்டுமன்றி சித்த மருத்துவர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய வகையில் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத் தலைவரும் மருந்து சஞ்சிகையின் கௌரவ ஆசிரியருமான வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்களின் தனிப்பட்ட செயல் திறனையும் பாராட்ட வேண்டியுள்ளது. தமிழரின் தனித்துவமான சித்த மருத்துவக் கலை மேலும் சிறப்புற்று தமிழ் மண்ணின் வாசனையை உலகெங்கும் போற்றி வளர்த்திட சித்த மருத்துவர்கள் இச் சஞ்சிகைக்கு வேண்டிய ஆக்க பூர்வமான உதவிகளை நல்கி வளர்த்திட வேண்டுமென்பதே என் அறைகூவலாக விடுக்க விழைந்துள்ளேன்.

இச் சஞ்சிகை தன் பணியை பல்லாண்டு, மக்களுக்கு ஆற்ற வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

*'' வாழ்க தமிழகம் வளர்க சித்த மருத்துவம்''*

# Message from

# the Deen, Medical Faculty, University of Jaffna

I have pleasure in sending this message on the occasion of the release of the journal "Marunthu" to mark the Second Anniversary of the Co-operative Pharmacy. They can be justifiably proud that they have produced and distributed several siddha medicaments which are well accepted by the local population at a time when the Allopathic drugs are in short supply. With the advice and collaboration of Siddha Medical Research Centre they have been able to produced effective Siddha Drugs for the treatment of various chronic ailments. Vaidya Perarignar Dr. K. Balasubramaniam, Chief Editor of this journal and Special Advisor to Co-operative Pharmacy deserves to be congratulated for this effort in educating the public on the use of Siddha drugs through this Journal. Siddha Medical Cooperative Society's effort in using palmyrah alcohol for the preparation of some of these medicaments need to be Commeded as it is a native resource. I wish Vaidya Perarignar Dr. K. Balasubramaniam and Siddha Medical Co-operative Society success in their efforts in alleviating the sufferings of the general masses using the native resources. I hope this service would be extended to places outside the Jaffna peninsula too.

**Prof. S. V. Parameswaran**
*Head/Physiology & Actg. Dean*

Faculty of Medicine
University of Jaffna.
13/05/1994

# அறிமுகம்

இலங்கையிலே சித்த மருத்துவத்திற்கு தனியாக ஒரு மரபு உண்டு. இலங்கை வரலாற்றிலே சித்த மருத்துவம் சிறப்பான ஒரு இடத்தை வகிக்கின்றது. இலங்கையின் அரசர்கள் எல்லாருமே சித்த மருத்துவத்தில் நிபுணர்களாக விளங்கியமையே காரணமாகும். இலங்கையில் சிறந்த மருத்துவ நூல்கள் வெளிவந்துள்ளன. அரசர்களுக்கிடையே நடைபெற்ற மோதல்களில் வெற்றிதோல்வியை, திறையை இறையை சித்தமருத்துவமே தீர்மானித்ததாக வரலாற்று நூல்களில் காணக்கிடக்கின்றது. இலங்கையில் ஏனைய மருத்துவமுறைகள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் எமது நாட்டுக்குச் சொந்தமான மருத்துவ முறையாக இருந்தது சித்தமருத்துவமாகும்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த நமது மருத்துவம் அந்நியர் ஆட்சியில் அரசு கட்டிலிலிருந்து தூக்கி வீசப்பட்டது. அந்த இருள் சூழ்ந்த காலத்தில் 1855-ல் சித்த மருத்துவத்தின் ஆற்றலை, சிறப்பை, மகிமையை அமெரிக்க விஞ்ஞானிகளுக்கும் உலகுக்கும் உணர்த்திய பெருமை வைத்திய மா மேதை பெரிய பரிகாரியார் ஆறுமுகம் அவர்களையே சாரும். இலங்கையில் சித்த மருத்துவ வரலாற்றைப் பார்ப்போமானால் அது ''பெரிய பரிகாரியாருக்கு முன், பெரிய பரிகாரியாருக்குப் பின்'' என்றே எழுதவேண்டி வரும்.

இத்த மருத்துவத்தை உலகறியச் செய்வதற்கு மருந்தாக இந்த இதழை ஆக்கியுள்ளோம். இலங்கையின் சித்தவைத்திய மரபின் தனித்துவத்தையும் மருந்துகளின் சிறப்புக்களையும் மக்கள் அறிந்து கொள்ள மருந்து சேவையாற்ற எல்லாம் வல்ல கணபதியும் தந்தை வைத்தியநாதனும் அருள்வார்களாக.

இன்றைய துன்பமான சூழ்நிலையில் உடல் நோய்க்கான மருந்துகளை உற்பத்தி செய்யும் சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் மனதுக்கு மருந்தாக இந்நூலை வெளியிடுவதை உலகம் வரவேற்கும். இதற்காக சங்கத்தையும் உறுப்பினர்களையும் தலைவர் திரு. தி. சபாரத்தினம் வடபிராந்திய கூ. ஆ. உ. ஆ. அவர்களையும் பாராட்ட வைத்திய உலகம் கடமைப்பட்டுள்ளது.

கௌரவ ஆசிரியர்

# வாழ்த்துரை

## புலவர் ம. பார்வதிநாதசிவம்

## வாழிய மருந்து

நோயை நாடியும் நோய்முதல் நாடியும்
நோயை தணிக்கும் வாய்தனை நாடியும்
வாய்ப்பச் செய்யும் வல்லமை பெற்ற
குலசேகர ராசாக்களின் வழித்தோன்றல்
பெரியபரிகாரியார் ஆறுமுகம் மரபில்
வந்தே உதித்த செந்தமிழ்ச் சிங்கம்
பாலசுப்பிரமணியமாம் மருத்துவஞானி
சித்த மருத்துவம் தெள்ளிதின் உணர்ந்தே
அத்துறை தன்னில் ஆய்வுகள் நிகழ்த்தி
மருத்துவரிடத்தும் மக்கள் தம்மிடத்தும்
மதிப்புப் பெற்ற மருத்துவப் பேரறிஞர்
மதுவாகாமல் கற்பகவளத்தை மருந்தெனவாக்கி
பழமையை பேணியும் புதுமைகள் ஆற்றியும்
மருத்துவ மகிமையை வையகம் போற்ற
மருத்துவத்துறைக்கு பெரும்பணி புரிவோன்
அன்னவன் மனத்தில் உதித்த நல் ஏடே
ஆண்டிதழ் ஆய மருந்தெனும் ஏடு
தோற்றப் பொலிவில் உட்பொருள் தன்னில்
தன்னிகர் இன்றித் திகழுமிவ்வேட்டை
பொற்கலத்திட்ட அமுதுடன் ஒப்பிடின்
சாலவும் பொருந்தும் ஞாலமே ஏற்கும்
சித்த மருத்துவ ஆய்வுகள் தெரியவும்
சித்த மருத்துவ ஐயங்கள் நீங்கவும்
காலம் வேண்டும் தேவைகள் யாவும்
தன்பாற் கொண்டே சீரிதின் விளங்கும்
சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத்தின்
மருந்தெனும் இந்தச் சிறந்த நல்ஏடு
பெரும்பணி ஆற்றும் பெறலரும் களஞ்சியம்
வாழிய மருந்து வாழிய மணியம்
வாழிய நிலைத்தே வாழ்த்துவம் நன்றே

வாழ்த்துச் செய்தி
வைத்திய கலாநிதி பூ. உரோம் மகேஸ்வரன்
*மாகாண ஆயுள்வேத பணிப்பாளர் வடக்குக் கிழக்கு மாகாணம்*
Message from Prof. S. V. Parameswaran
*Deen, Medical Faculty University of Jaffna*
வாழ்த்துரை — புலவர் ம. பார்வதிநாதசிவம்
அறிமுகம் — கௌரவ ஆசிரியர்

# உள்ளே...


1. சித்த மருந்துகளின் உற்பத்தி — திரு. தி. சபாரத்தினம்
தலைவர், சித்த மருத்துவ கூட்டுறவுச்சங்கம், கூ. ஆ. உ. ஆ. (ப/தெ) வடபிராந்தியம்

2. வளர்ச்சிப் பாதையில் கூட்டுறவு மருந்துச்சாலை
வைத்தியச்சாரிணி பா. இராதாதேவி முகாமைப்பணிப்பாளர் சி. வை. கூ. சங்கம்

3. இன்றைய சுகாதாரப் பிரச்சனைகளுக்கு சித்தமருத்துவம்
வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்
தவிசாளர் — சித்தாவைத்திய ஆராய்ச்சி நிலையம்
சிறப்பு ஆலோசகர் — கோபாம்

4. சித்தவைத்திய சுகாதார சேவை — திரு. சா. செல்வரத்தினம்
தலைவர், வடமாகாண ப. தெ. அ. கூ. ச. சமாசம்

5. சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் — திரு. வி. கே. அருந்தவநாதன்
செயலாளர், சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம், கூ. அ. உ.

6. எமது நோக்கங்கள் — திரு. செ. செல்வராசா
உறுப்பினர் இயக்குநர் சபை சி. வை கூ. ச.

7. தெங்கின் மருத்துவம் — செல்வி க. பிரேமலதா
வைத்திய மாணவி 1ம் வருடம், சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையம்

8. கோபாம் மருந்துகளின் பட்டியல் — திரு. பொ. சத்தியமூர்த்தி
உறுப்பினர், இயக்குநர் சபை, சி. வை. கூ. சங்கம்,
பொது முகாமையாளர் வடமராட்சி ப. தெ. வ. கூ. ச, கொத்தணி

9. சித்த மருந்துகளின் தர நிர்ணயம் - வைத்திய கலாநிதி து. சண்முகராசா
வலிமேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

10. புதிய மருந்துகளின் விபரம் — வைத்திய கலாமணி அ. தாட்சாயினி
மருந்து உற்பத்தி முகாமையாளர்


11. Copharm A Historical Inevitability by S. Kandasamy D. C. O.

12. சுகாதார சேவை விபரம் — செல்வி த. இந்துமதி
சித்த சுகாதார சேவையாளர் — கரவெட்டி

13. சித்த மருத்துவம் - திருமதி தி. விஜயஸ்ரீ
சித்த மருந்தாளர், சாவகச்சேரி

14. மருந்தாளர் சேவை விபரம் - செல்வி சி. மேரிபிளசிடா
சித்த மருந்தாளர் யாழ் ப. தெ. கூ. ச. கொத்தணி

கோபாம் பற்றிய அறிஞர் கருத்துக்கள்



# இலங்கையில் சித்த மருந்துகளின் உற்பத்தி

இலங்கையில் சித்த மருந்துகள் இது வரை சித்த வைத்தியர்களாலேயே தேவைக்கேற்ப உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. இந்தியாவிலிருந்து தயாரிக்கப்பட்டு தருவிக்கப்பட்ட மருந்துகளும் மருந்துச் சரக்குகளும் இறக்குமதி செய்யப்பட்டு வியாபாரிகளால் விநியோகிக்கப்பட்டு வந்தன. 1983ல் இடம்பெற்ற கலவரங்களின் பின்னர் தமிழ்ப்பகுதிகளில் சித்த மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது. இதனால் தமிழர் தமிழ்பாரம் பரிய மூலமான வைத்திய தேவைகளை நிறைவு செய்வது சிரமமாக இருந்தது. மருந்துத் தட்டுப்பாட்டினால் உள்ளூராட்சி இலவச வைத்தியசாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. ஏழை நோயாளர்கள் நோய்களினால் அவதிப்பட்டார்கள். ஒரு சில தனியார் சிலவகை மருந்துகளை குறைந்தளவில் உற்பத்திசெய்துவந்தார்கள். இச்சூழலில் தரமான மருந்துகளை தட்டுப்பாடில்லாமல் விநியோகிக்க வேண்டிய தேவை அவசியமாக இருந்தது. எந்த பொது அமைப்புகளும் துணிந்து இத்தேவையை நிறைவேற்ற முன்வரவில்லை. இந்த நேரத்தில் தான் 1992ம் ஆண்டு முற்பகுதியில் யாழ் மாநகர சபையில் அப்பொழுது பிரதம வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்களின் சந்திப்பு எமக்கு ஏற்பட்டது. அவருடைய திறமையையும் ஆற்றலையும், கூட்டுறவுத் துறையையும் பனை வள கூட்டுறவுச் சங்கங்களும் உறுதியுடன் பயன் படுத்தினால் வெற்றிகிடைக்கும் என்பதனை அறிந்த நாம் அவரின் ஆலோசனையுடன் அவர் மூலம் இட்ட திட்டப்படி சித்தன்கேணியில் அமைக்கப்பட்டதுதான் இக் கூட்டுறவு மருந்து உற்பத்திச்சாலையாகும். அவரே சிறப்பு மருத்துவ ஆலோசகராக இருந்து உற்பத்தியில் கௌரவ சேவையாற்றி வருகின்றார். 1992ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி இது இயங்க ஆரம்பித்தது. எம்மால் அத்தினத்தில் மருந்து உற்பத்தி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இருபது வருட கால வரலாற்றிலே ஆண்டாண்டு காலமாக மதுவை உற்பத்தி செய்து வந்தவர்கள், மருந்தை உற்பத்தி செய்யத் தொடங்கினார்கள். இது பனைவள ஆக்க வரலாற்றில் புரட்சிகர மாற்றத்துடன் கூடிய முன்னேற்றமாக அமைந்தது. ஆரம்பத்தில் இந்த மருந்துச்சாலை வடமாகாண பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. பனை உற்பத்திப் பொருட்களாகிய வெல்லம், சீனி, பாணி, கல்லாக்காரம், மதுசாரம் ஆகியன மருந்து உற்பத்திக்கு மூலப்பொருட்களாக பயன்படுத்தப்பட்டன. எமது மருந்து உற்பத்திகள் சிறந்த தரமுடையவையாகக் காணப்பட்டமையால் அவை மக்களிடையே அமோக வரவேற்பைப் பெற்றன. அதே நேரத்தில் இந்நாட்டின் புகழ் பெற்ற வைத்தியர்களின் பாராட்டுக்களையும் பெற்றன.

எமது முதல் விற்பனையை யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அவர்களே கைதடி அரசினர் வைத்தியசாலைக்கு எமது உற்பத்தி மருந்துகளை விநியோகிக்க ஆவன செய்தார்கள். மருந்துச்சாலையின்

வளர்ச்சிக்கு தன்னாலான உதவிகளையும் சிரமம் பாராது நிறைவேற்றி வந்தார்கள். அடுத்ததாக யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. டிவகலாலா அவர்க உள்ளூராட்சி மன்ற இலவச வைத்தியசாலைக்கு எமது மருந்துகளை விநியோகிக்க ஏற்பாடு செய்தார்கள். உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளும், வைத்திய அதிகாரிகளும் மனமுவந்து ஒத்துழைப்பு நல்கினார்கள். தனியார் வைத்தியர்களும் தரமான மருந்து தமக்குத் தேவையென மருந்துகளை எம்மிடம் நேரடியாக கொள்வனவு செய்தார்கள். எமது உற்பத்தியின் மூன்றிலொரு பகுதியை தனியார் வைத்தியர்களே கொள்வனவு செய்து வருகிறார்கள்

சமாசத்தின் பொறுப்பில் இவ் உற்பத்தி முயற்சி பராமரிக்கப்பட்டு வந்தபோதிலும் நிர்வகிப்பை இலகுவாக்குவதற்காக எமது தலைமையில் நியமிக்கப்பட்ட செயற்குழு நிர்வாகத்தை நிறைவேற்றி வந்தது. சமாசம் ரூபா. 45,000/-ஐ ஆரம்பத்தில் முதலீடு செய்திருந்தது.

"கோபாம்" (Co operative pharmacy) ஓராண்டினைப் பூர்த்தி செய்த வேளை நூற்றுக்கணக்கான மருந்துகளின் விபரங்களடங்கிய கையேட்டினை வெளியிட்டு வைத்தோம். இன்று இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி "மருந்து" என்ற பெயரில் சித்த மருத்துவ ஆண்டுச் சஞ்சிகையை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

நாட்டின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் நாளுக்கு நாள் கோபாம் மருந்துகளுக்கான கோரிக்கைகள் அதிகரித்து வருவதால் நாம் முதலில் குடாநாட்டில் சகல பகுதிகளிலும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க எல்லை ரீதியாக "கோபாம்" மருந்து விற்பனை நிலையங்களை அச்சங்கங்கள் மூலம் ஆரம்பித்து வருகின்றோம். தற்போது சங்க அங்கத்தவ குடும்பங்களை சேர்ந்தவர்கள் மருந்தாளர்களாகச் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சியளிக்கப்பட்டு விற்பனை நிலைய பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் சித்த மருந்துகளை "கோபாம்" உற்பத்தி செய்து வருகின்றது. உதாரணமாக மதுமேக சூரணம், ஆடாதோடைப் பாணி, உடன்காய மருந்து, குளிப்புத்தூள் போன்ற சிலவற்றை விசேடமாகக் குறிப்பிடலாம். பனை மதுசாரத்திலிருந்து உலகிலேயே முதன் முதலில் மூலிகைச் சத்துக்களைத் தயாரித்து வெற்றி கண்டவர் வைத்திய பேரறிஞர். சு. பாலசுப்பிரமணியம் ஆவார்கள். அவர் எதுவித சன்மானமும் பெற்றுக்கொள்ளாது அத் தயாரிப்பு முறைகளை கூட்டுறவு மருந்துச் சாலைக்கு வழங்கியமைக்காக பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களும் நாமும் அவரை நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்றுவரை நாம் 12லட்ச ரூபா பெறுமதியான மருந்துகளை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளோம். பல மருந்துக் கண்காட்சிகளை நடாத்தியுள்ளோம். சித்த மருத்துவ சுகாதார சேவை ஆராய்ச்சியை விஸ்தரித்து பராமரிக்கும் வசதிகளுக்காக பிற்பகுதியில் வலிகாமம் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி மருந்துச்சாலையை பொறுப்பேற்றுக் கொண்டது. கொத்தணி இதனை வளர்த்தெடுப்பதிலும் வைத்திய பேரறிஞர் அவர்களின் ஆலோசனைகளைச் செயற்படுத்துவதிலும் அதிக அக்கறை காட்டி ரூபா 2இலட்சமளவில் முதலீடு செய்தது. வளர்ச்சியை முன்னெடுப்பதற்காக இயந்திர சாதனங்களையும் கொள்வனவு செய்தது.

மருந்துச் சாலைகளின் வளர்ச்சி துரிதமாக விரிவடைந்ததினால் அதனை மேலும் வளர்த்தெடுப்பதற்கு நடுவகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அமைப்புக்கள் சகலவற்றையும் அங்கத்தவராகக் கொண்டு சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் உருவானது பனை தென்னை வளச் சங்க வரலாற்றிலே இது இரண்டாவது மைல் கல் எனலாம். தற்போது சித்த வைத்திய கூட்டுறவு சங்கமே சித்த மருந்துகளை உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றது. இது தற்போது ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமாக தனித்துவத்துடன் இயங்கி வருகின்றது. சித்த மருத்துவ துறைக்கு என ஏற்படுத்தப்பட்ட முதலாவது கூட்டுறவு

சங்கம் உலகிலேயே இது எனலாம். இதன் பெருமை பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களையே சாரும்,

ஆரம்ப நிலையில் குளிகைகள், சூரணங்கள், லேகியங்கள், எண்ணெய்கள், காடிகள் மூலிகைச் சத்துக்கள் உற்பத்தி செய்தோம். இன்று பற்பல செந்தூரங்கள், பாணிகள், களிம்புகள் போன்ற சிரமமான தயாரிப்புக்களையும் உற்பத்தி செய்து வருகின்றோம் என்பது மகிழ்ச்சியான செய்திகளாகும். மேலும் மக்கள் சுகாதாரத்தைப் பேணுவதற்கு வசதியாக ''ஓமத்திராவகம்,'' குளிப்புத் தூள்,'' ''நன்பானம்'' முதலியவற்றையும் உற்பத்தி செய்து வருகின்றோம். தற்போது ஏறத்தாழ 150 வகையான மருந்துகளை உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றோம், இவற்றை வகுக்கப்பட்ட விதத்தில் சிறப்பாக தயாரித்து விநியோகிக்க எமது மருந்துச்சாலையின் முகாமைப் பணிப்பாளர் வைத்தியசாமிணி பா. இராதாதேவி அவர்களின் திறமையும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இரண்டாவது படி வளர்ச்சியாக தற்போது சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சித்த ''வைத்திய'' நிலையத்தினையும் வைத்திய சேவைக்காக ஆரம்பித்து நடாத்தத் தொடங்கியுள்ளது.

யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் எமது விநியோகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் விற்பனை நிலையமும், வைத்திய நிலையமும் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. ஏனைய மாவட்டங்களிலும் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க ஏற்பாடாகியுள்ளது.

இச்சேவைகளினால், பனை தென்னை வள தொழிலாளர்கள் மருத்துவ சேவை செய்பவர்களாகவும் மாறி வருகிறார்கள். சமுதாயத்தில் இது அங்கத்தவர்களுக்கு ஒரு உயர்ந்த பார்வையைக் கொடுக்கின்றது. வேலை வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்குவது மட்டுமல்லாமல் அவர்களுடைய குடும்ப சுகாதாரமும் பராமரிக்கப்படுகின்றது. தற்போது சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் பயிற்றப்பட்ட சுகாதார தொண்டர்களின் உதவியுடன் மருந்து உற்பத்தி சம்பந்தமான பல கருத்தரங்குகளை நடாத்தியும் கண்காட்சிகளை நடாத்தியும் பிரசுரங்களை வெளியிட்டும் கிராம மட்டத்தில் அடிப்படை சுகாதார ஆலோசனைகளையும் சேவைகளையும் வழங்கும் முயற்சிகளையும் ஆரம்பித்துள்ளது.

மருந்து உற்பத்தியை இயந்திர மயமாக்கி விரைவில் புதிய வடிவில் மருந்துகளைத் தயாரிக்கும் முயற்சிகளும் தொடங்கப்படவிருக்கிறது. மருந்து உற்பத்திக்குத் தேவையான மூலிகைகளை உற்பத்தி செய்யவும், சேகரிக்கவும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். கூட்டுறவுச் சேவையினால் சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் பல முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது மக்கள் சேவையில் உள்ள சகலருக்கும் பெருமைதரும் விடயமாகும். மருந்து என்ற மருத்துவ சஞ்சிகையை ஆண்டிதழாக வெளியிடுவதில் நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அன்புடன்,
கூட்டுறவு சேவையிலுள்ள,
தி. சபாரத்தினம்
தலைவர், சித்த வைத்திய கூ. சங்கம்,
கூ. அ. உ. ஆணையாளர்
(பனை தென. வள அபி)
வட பிராந்தியம்

# வளர்ச்சிப் பாதையில் கூட்டுறவு மருந்துச்சாலை

இலங்கையில் கூட்டுறவு வரலாற்றிலே சித்த மருந்துகளை உற்பத்திசெய்ய பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கியது ஒரு மைல் கல் ஆகும். தமிழரின் பாரம்பரிய மருந்துகளான சித்தமருந்துகளை உற்பத்திசெய்வதனால் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் கூட்டுறவு மருந்துச்சாலை 15-6-1992இல் சித்தன் — கேணியில் வடபிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் அவர்கள் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்கள். அவருடைய விடாமுயற்சியினால் தான் கோபாம் உருவாகியது. கோபாம் நிறுவனத்தை நிர்வகிப்பதற்காக கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் அவர்கள் தலைமையில் ஒரு குழு நியமிக்கப் பட்டது.

திரு தி. சபாரத்தினம்
கூ. ஆ. உ. ஆணையாளர் - தலைவர்
வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர் - துணைத்தலைவர்
திரு. சா. செல்வரத்தினம்
வடமாகாண ப. தெ. கூ. ச. சமாசத் தலைவர் - அங்கத்தவர்
திரு மு அன்னலிங்கம்
வலிகாமம் ப. தெ. கூ. ச. கொத்தணித் தலைவர் - அங்கத்தவர்
திரு. பொ. கணேசலிங்கம்
தலைமைக் காரியாலய கூட்டுறவு பரிசோதகர் - செயலாளர்
வைத்தியச்சாரிணி பா. இராதாதேவி
முகாமைப் பணிப்பாளர்
பதவிவழி அங்கத்தவர்

கூட்டுறவு மருந்துச்சாலை வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் பராமரிப்புப் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டது. இந்தக் குழுவினர் கூட்டுறவு மருந்துச்சாலையில் தமது கூட்டங்களை நடாத்தியும் அடிக்கடி வந்து பார்வையிட்டும் இதன் வளர்ச்சிக்கு உதவி புரிந்தார்கள்.

தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு பொ. கணேசலிங்கம் செயலாளராகவும், கணக்கு ஆய்வாளராகவும் கடமை ஆற்றிய வேளையில் பல வழிகளிலும் கோபாமின் வளர்ச்சிக்காக பல பணிகளை ஆற்றியுள்ளார். சித்தங் கேணியில் வலிகாமம் ப. தெ வ. கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் நடாத்தப்பட்டு வந்த சீனித் தொழிற்சாலை சித்தங்கேணியில் அமைந்துள்ளது. வடிசாலை சங்கானையில் அமைந்துள்ளது. சங்கானை ப. தெ. வ. கூட்டுறவுச் சங்கத்தின் வெல்லத் தொழிற்சாலை சங்கானையில் அமைந்துள்ளது. இக் காரணங்களாலே கூட்டுறவு மருந்துச்சாலை சித்தங்கேணியிலே அமைக்கப்பட்டது. பராமரிப்பு வசதிகளுக்காக கூட்டுறவு மருந்துச் சாலை வலிகாமம் கொத்தணியிடம் ஒப்படைக்கப்பட்டது. கொத்தணியின் நிர்வாகம் கூட்டுறவு மருந்து சாலையை துரிதமாக வளர்த்து எடுப்பதில் முக்கிய கவனம் செலுத்தியது ஏறத்தாழ 2 லட்சம் ரூபா முதலீடு செய்தது, இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்து ஒரு தொழிற்சாலையாக அதன் தரத்தை உயர்த்தியது. இந்தக் காலத்திலே முதலாவது மருந்து விற்பனையை யாழ் மாவட்ட அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் 12-8-92 அன்று ஆரம்பித்து வைத்தார். மருந்துச் சாலைக் குழுவின் தலைவரும் கூட்டுறவு உதவி ஆணையாளருமான திரு. தி. சபாரத்தினம் அவர்கள் தலைமையில் விற்பனை விழா நடைபெற்றது. சங்கானை ப. நோ. கூ. ச., வலிகாமம் மேற்கு பிரதேச அதிகாரிகள், உள்ளூராட்சி வைத்திய அதிகாரிகள், பனை

தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் கொத்தணிகள் பல துறையைச் சேர்ந்த பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள். தலைவர் திரு. சபாரத்தினம் அவர்களின் தளராத முயற்சியினாலே மருந்துச் சாலைக்கு வேண்டிய தளபாட மருந்து உற்பத்தி உபகரணங்கள் பல இடங்களிலும் இருந்து பெற்றுக் கொள்ள முடிந்தது. சிறப்புவைத்திய ஆலோசகர் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் தமது மருந்து உற்பத்திக்கான தளபாட உபகரணங்களை மருந்துச் சாலையின் பாவனைக்கு வழங்கியுள்ளார். இன்றும் அவற்றைப் பயன்படுத்தி வருகின்றோம். 26-01-93இல் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு டிவகலாலா அவர்கள் தலைமையில் கோபாம் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. கோபாம் மருந்துகள் பற்றி 40 உள்ளூராட்சி வைத்திய அதிகாரிகளாளாலும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளாலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன பெரும்பாலான வைத்திய அதிகாரிகள் கோபாம் மருந்துகள் சிறந்த தரத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதை வலியுறுத்தி பேசினார்கள். அவர்களுக்கு எமது நன்றி பாராட்டுக்கள். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கள் கோபாம் தரநிர்ணயம் செய்வதற்கு மூவர் கொண்ட குழுவை தெரிவு செய்தார்கள். சங்கானையில் நடந்த கண்காட்சியில் முதலில் பங்குபற்றினோம். அங்கு எமது மருந்துகளைப் பார்வையிட்டவர்கள் உடன் சங்கானையில் மருந்து விற்பனை நிலையத்தை ஆரம்பிக்குமாறு வேண்டினார்கள். அவர்களின் வேண்டுகோளை ஏற்று கொத்தணியூடாக சில்லறை விற்பனை சேவை உருவானது.

93 ஆனி மாதம் 3ஆம் 6ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் உள்ளூராட்சி திணைக்களத்தால் நடத்தப்பட்ட கண்காட்சியில் பங்குபற்றினோம், எமது மருந்துகள் தமிழ்மக்களிடையே சித்த மருத்துவம் பற்றிய ஒரு எழுச்சியையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தின. யாழ்ப்பாணத்தில் கோபாம் மருந்துகள் விற்பனை நிலையம் அமைய வேண்டும் என்ற கோரிக்கை பலமாக ஒலித்தது. சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத் தலைவரும் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளருமான திரு. தி. சபரரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இடம் கிடைக்காத நிலையிலும் தமது அலுவலகத்தின் ஒரு பகுதியிலேயே விற்பனை நிலையத்தை 7-6-93இல் ஆரம்பித்தமை அவரொரு அரச அதிகாரியாக இல்லாமல் மக்கள் சேவையாளனாக கடமை ஆற்றுகிறார் என்பதை எல்லோரும் அறிய வாய்ப்பாக இருந்தது. நல்லூர்த் திருவிழாவின்போது நல்லூரில் நடந்த கண்காட்சியிலும் கோபாம் மருந்துகள் காட்சிக்கு வைப்பதற்கு பனை, தென்னை வள ஒன்றியம் இட உதவி அளித்தது. இந்த விற்பனை நிலையம் 15-11-93இல் இருந்து யாழ்ப்பாண பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கொத்தணியால் பொறுப்பேற்கப்பட்டு இயங்கி வருகிறது.

முல்லைத்தீவு பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் 25-11-93இல் விற்பனை நிலையத்தையும் ஆரம்பித்தது. வைத்திய கலாநிதி தேவராஜா நடாத்தி வருகிறார். வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கொத்தணி விற்பனையை ஆரம்பித்துள்ளார்கள்.

யாழ் மாவட்டத்திலே பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் எம்முடைய மருந்துகளை கொள்வனவு செய்து வருகின்றன. பளை, பூநகரி பிரதேச சபைகளும் கோபாம் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு அப்போதைய கிளிநொச்சி உதவி உள்ளூராட்சி ஆணையாளராக கடமையாற்றிய திரு. வ- கிருஸ்ணசாமி அவர்கள் உதவிவழங்கினார். மன்னார் மாவட்ட நானாட்டான் பிரதேச சபைக்கு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஐ. பாலசுப்பிரமணியம் அவர்கள் கோபாம் மருந்துகளை கொள்வனவு செய்தார்கள்.

சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் ''தமிழ் தேசியமும் சித்த வைத்தியமும் என்ற பிரசுரமும்'' ''சித்த மருத்துவம் மக்கள் மயப் படுத்தல்''என்ற பிரசுரமும் வெளியிட்டமை மக்களிடையே சித்த மருத்துவ எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது, இன்று சித்த வைத்தியம் சம்பந்தமாக நடைபெறுகின்ற முயற்சிகள் உதாரணமாகும். யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சித்த

மருத்துவம் மக்கள் மயப்படுத்தல் என்ற நோக்கில் 2 நாள் கருத்தரங்கினை 29, 30/8/93 திகதிகளில் சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம் நடாத்தியது. யாழ் குடாநாட்டின் பிரபலமான வைத்திய அறிஞர்கள் கலந்துகொண்டு உரையாற்றியது வரலாறு காணாத நிகழ்ச்சியாகும்.

சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் சித்தா வைத்திய ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் சித்தவைத்திய தொண்டர் பயிற்சி, சித்த மருத்தாளர் பயிற்சி ஆகியவற்றை நடாத்தி வருகின்றது. சித்த வைத்திய சுகாதார சேவையை அறிமுகப்படுத்தி வருகிறது. வடபிராந்திய கூ. அ. உ. ஆணையாளர் திரு. சபாரத்தினம் அவர்களும் சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையத் தலைவர் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்களும் கிராமம் கிராமமாகச் சென்று சித்தவைத்திய சுகாதார சேவையை ஆரம்பித்து வருகிறார்கள்.

எமது மருந்துகளையும் சேவைகளையும் மக்களுக்கு அறியப்படுத்தும் வகையில் மருத்துவ சஞ்சிகை வெளியிடுவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

**வைத்தியாச்சாரிணி பா. இராதாதேவி**
*முகாமைப் பணிப்பாளர்*
*சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்*

* * *

மூலிகைகளை சாராயத்தில் ஊற வைத்து பிறகு வடித்து குடிக்கும் மருந்துக்கு சாராய ஊறல் என சித்தர்களால் பெயரிடப்பட்டது. அரக்கு என்றால் மது இலங்கை வேந்தனாகிய இராவணர் சிறந்த சித்தன். அவரால் எழுதப்பட்ட அரக்கப் பிரகாசம் என்ற நூல் பாவன திரவங்களைப் பற்றி வர்ணிக்கின்றது. முதன் முதலில் மதுவை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகளுக்காக ஒரு தனி நூலை எழுதியவர் இராவண சித்தர். இவருடைய நூல்களே டிங்சர் முறைகளுக்கு ஆதி நூல்கள் ஆகும்.

**வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்**
*தலைவர், பிரதம வைத்திய ஆராய்ச்சியாளர்*
*சித்தா வைத்திய ஆராய்ச்சி நிலையம்*
*யாழ்ப்பாணம்*

# இன்றைய சுகாதாரப் பிரச்சனைகளுக்கு சித்தமருத்துவம்



இன்றைய சுகாதாரப் பிரச்சினைகளால் ஏற்படும் பாதிப்புக்கள் மக்களின் உடல், உள, சமூக ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இப்போது ஏற்படும் நோய்களை நோக்குமிடத்துப் பெரும்பாலானவை தடுக்கக் கூடியவையேயாகும். தமிழர் சுகாதார வழிமுறைகளைப் பேணுவதனால் இவற்றை அகற்றி விடலாம். முக்கியமாக ஒவ்வொரு குடும்பத்தவரும் தத்தம் சுகாதாரத்தை ஒழுங்காக பேணவேண்டும். சித்த வைத்திய சுகாதார தொண்டர்களும், சித்த மருந்தாளர்களும், சுகாதார வாழ்வுக்கு ஆலோசகர்களாகவும், தேவையானபொழுது உதவிகளை செய்பவர்களாகவும் இருப்பார்கள்.

### பொதுவாக காணப்படும் நோய்கள்

பெரும்பாலான நோய்கள் சுகாதார விதிகளைப் பேணுவதாலும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற் கொள்வதனாலும் தடுக்கக் கூடியவையாகும்.

1. போசாக்கின்மை
2. குடற் புழுக்கள்
3. இரத்த சோகை
4. காட்டுக் காய்ச்சல் (மலேரியா, மூளை மலேரியா)
5. நெருப்புக்காய்ச்சல்
6. வயிற்றோட்டம்
7. குருதியழுகல் (நச்சு கிருமியதிகரித்தல், செப்ரிசிமியா)

### பாதிப்பு நோய்கள்

உடலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துபவை. தொற்றாதவை.

1. மதுமேகம்
2. புற்றுநோய்
3. இருதய நோய்
4. மனநோய் (உளத்தாக்கம்)
5. சுவாச நோய்கள்
6. விபத்துக்கள்
7. விடக்கடிகள்

இக்காரணங்களினால் உழைத்து வாழ வேண்டியவர்கள் பிறர் உழைப்பில் வாழ வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை ஏற்படுகிறது. இந்த நிலையிலிருந்து எமது மக்கள் விடுபட வேண்டுமாயின் இங்குள்ள சமூக சேவை நிறுவனங்கள், பொதுமக்கள், அரச அதிகாரிகள் யாவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். தமிழினத்தின் வாழ்க்கைத்தரம் எமது சுகாதார நிலையிலேயே தங்கியுள்ளது. உலகில் தேசிய மருத்துவ சுகாதாரம் வளர்ச்சியடைந்த நாடுகளில் மக்களின் சுகாதாரத்தின் தரமும் உயர்ந்த நிலையிலுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

### நோய்க்கான காரணிகள்

1. தொற்று நோய்கள் :

இவை பொதுவாக பலவிதமான கிருமிகளினாலும் பூச்சி புழுக்களினாலும் ஏற்படுகின்றன என்றாலும் இவை அநேகமாக

இன்றைய சூழலில் அநேக மக்கள் இடம் பெயர்ந்து வாழ்வதாலும் சுகாதார வசதி களற்ற நிலையில் சீவிப்பதனாலும், தொழில் வருமானங்களை இழந்துள்ளதாலும், முகாம் களில் அல்லது வீடுகளில் அளவுக்கதிகமாக நெருக்கமாக தங்கியிருப்பதனாலும், இயற்கைச் சூழல் பாதிப்படைந்துள்ளதாலும் உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவை களான காற்று, நீர், உணவு, இருப்பிடம் மாசடைவதனாலும் ஏற்படுகின்றன. மேலும் இந்த சூழ்நிலையில் சுகாதார விதிகளை கடைப்பிடிப்பதிலுள்ள சிரமங்கள் மற்றும் நுளம்பு, ஈ போன்ற நோய்க்காவிகள் அதி கரித்துக் காணப்படுகின்றமையுமாகும்.

2. ஏனைய நோய்கள் :

மதுமேகம், இருதய ரோகம், போசாக் கின்மை, இரத்தசோகை போன்ற நோய் கள் உணவுக் குறைபாடுகளினால் ஏற்படு கின்றன. உணவு பற்றாக்குறை தரம் குறைந்த உணவு, ஒழுங்கற்ற உணவு, போசாக்கில்லாத வயிற்றை நிரம்புகின்ற உணவு, கிடைக்கக் கூடிய சத்துள்ள உணவு களைப் பற்றிய அறியாமை, உணவு பக்கு வம் செய்வதிலுள்ள குறைபாடு முதலியன முக்கியமாக காணப்படுகின்ற குறைபாடு களாகும்.

புற்றுநோய் உடலில் ஏற்படும் உறுத் தல்களினாலும் சில நச்சுப் பொருட்களை பொறுப்பற்ற முறையில் கையாளுவதனா லும் உடலில் பாதிப்பு ஏற்பட்டவர்களில் பெரும்பாலும் காணப்படுகின்றன.

விபத்துக்கள் பீதியினாலும், பாதைச் சீர்கேடுகளாலும், பாதை ஒழுங்கு விதிகளை கடைபிடிக்காமையினால் ஏற்பட்டு அங்க வீனர்களாக வாழுகின்ற நிலை அதிகரித் துள்ளது.

ஆபத்து வேளைகளில் மறைவிடங்களில் ஒதுங்கும் போதும், பாதுகாப்பற்ற இடங் களில் வசிப்பதாலும் விடக்கடிக்கள் அதி கரித்துள்ளதுடன் இறப்போர் தொகையும் கூடியுள்ளதற்கு தகுந்த முதலுதவி உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. பெரும்பாலும் விடத்தை நீக்கும் ஆரம்ப சிகிச்சை பற்றிய அறிவு அநேகருக்கு இல்லாமை, பாம்புகளைத் தவிர ஏனைய சீவராசிகளின் விடத்திற்குரிய மாற்று மருந்துகள் பற்றிய அறியாமை முக்கியமான காரணங்களாகும்.

மனநோய் உளப்பாதிப்புக்கள் பயத்தி னாலும், பேரிரைச்சல்களினாலும், அதிர்ச்சி களினாலும் வாழும் முறைகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள் இழப்புக்களினால் ஏற்படும் கவலையினாலும் ஏற்படுகின்றன.

சுவாச நோய்களில் மூச்சுக்கஷ்டம், சளி, கசம் போன்ற நோய்கள் நச்சுவாயுக்களி னாலும் வெடிகுண்டு புகைகளினாலும், காற்று சூழல் மாசடைவதனாலும் உண்டா கின்றன.

**தனிநபர் சுகாதாரம்**

1. பேசாக்கு : போசாக்கு குறைவடை யாமல் கவனித்தல். நல்ல போசனை யுள்ளவருக்கு நோய் எதிர்க்கும் சக்தி அதிகமாக காணப்படும்.
2. நல்லொழுக்கத்தையும், நன்னடத்தை யையும் பேணுதல்.
3. தமிழர் சுகாதார விதிகளை கடைப் பிடித்தல், கொதித்தாறிய நீர், உருக் கிய நெய், பெருக்கிய மோர் உணவில் சேர்த்துக் கொள்ளல், மலசலங்களை முறையாக கழித்தல், கண்ணுக்கு அஞ் சனமிடல், வருடத்தில் 2 தரம் பேதி செய்வித்தல் முதலியன.
4. நாட் கடமைகளையும், சுத்தத்தையும் பேணுதல்.
5. சித்த மருத்துவ நோய் தடுப்பு மருந்து களைப் பாவித்தல் பாவனை மருந்து கள், நோய் எதிர்ப்புச் சக்தியை அதி கரிக்கும் மருந்துகள், குறிப்பிட்ட நோய்களுக்கான தடுப்பு மருந்துகள்.

**சூழல் சுகாதாரம்**

1. குடிக்கும் நீர் சுத்தமாக இருக்கவேண் டும்.
2. உணவு பானங்கள் சுத்தமாக பாது காக்கப்பட வேண்டும்.
3. கழிவகற்றல், மலகூடம், உரிய முறை யில் அமைய வேண்டும்.
4. தொற்று நீக்குதல் முறையாக கவனிக்க பட வேண்டும்.

5. நோய்காவிகளை ஒழித்தல் வேப் எண்ணை தெளித்தல், வேப்பம் விதை இலை புகைத்தல், மஞ்சளை கரைத்துத் தெளித்தல், உற்பத்தியாகும் இடங் களை அழித்தல், புழுதி மேலெழும்போது சாணி தெளித்தல், நீர் தெளித்தல் கிருமிகள் பரவுவதை தடுக்கும்.

## நமது கடமைகள்

1. மக்களிடையே சுகாதார அறிவை வளர்த்தல்
2. சுகாதார சேவையாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி நோயின் ஆரம்பத்திலேயே இனங் காணுதல்.
3. தொற்று நோய் வேகமாக பரவி வரும் இடங்களை வேறுபடுத்தி முக்கிய சிகிச்சைகளை வழங்க ஆவன செய்தல்.
4. சரியான சிகிச்சை அளித்தல். வைத்திய ஆலோசனைகளை முறையாக பின்பற்றுதல்.
5. அத்தியாவசியமாக மருந்துகளையும், சுகாதாரப் பொருட்களையும் அங்கே கிடைக்க வழி செய்தல்.
6. உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு சிகிச்சையளித்தல்.
7. உளபாதிப்புக்குள்ளானவர்களுக்கு புனர் வாழ்வளிக்க ஆவன செய்தல்.

## தடுப்பு முறைகளும் மருந்துகளும்

1. போசாக்கின்மை :
   1) சத்துணவு
   2) இலைக்கஞ்சி
   3) நன்பானம்
   4) முந்திரிகாடி
   5) நெல்லிக்காய் லேகியம்
   6) தாமரைக்காடி
   7) சீவாமிர்தப் பாணி

2. குடற் புழுக்கள் :
   1) பாகற்காய், வேப்பம் பூ, துவரம் பருப்பு, பனங்கிழங்கு, பனங்கட்டி, வாய்விடங்கம், புடலங்காய் உணவாக பாவித்தல்.
   2) வருடத்தில் இரு தடவை பேதி மருந்துகள் உண்ணுதல்.
   3) கராம்பு, மிளகு, வேப்பங்கூர், வாய் விடங்கம், சுக்கு, கிருமிசத்துரு, அவித்த நீருடன் பனங்கட்டி சேர்த்து ஒரு நாளைக்கு 3 தரம் மூன்று நாட்களுக்கு கொடுத்தல்.
   4) கிருமி நாச குளிகை, மிளகுகுளிகை, அமுதாதி மாத்திரை, வெந்நீர் குளிகை, கற்பூர திராவகம், விடங்க காடி, வேப்பம் பட்டை காடி, கருங்காலிக்காடி, நிலபாவற் சூரணம்.

3. இரத்த சோகை :
   1) பாதங்களுக்கு மருதோன்றியிடல்
   2) இலைக் கறிகளை உணவில் அதிகம் சேர்த்தல்
   3) கிருமி சிகிச்சையளித்தல்
   4) அயக்காடி, கிட்டக்காடி, முப்பலைக்காடி, பனங்கள்ளுக்காடி, அயரசாயனம், அன்னபேதி செந்தூரம்

4. காட்டுக்காய்ச்சல் :
   1) வேப்பம் விதையை, இலையை இரவில் புகைத்தல்
   2) வேப்ப நெய் விளக்கு எரித்தல்
   3) வேப்பந்துளிர், சிறிது மஞ்சள் அரைத்து விழுங்குதல்.
   4) வேப்பம் கள் அருந்துதல்
   5) வேப்பம் காடி அருந்துதல்
   6) நிலவேம்பு தூள், சீந்திற்காடி, இராமபாண குளிகை, வல்லாதிகு வல்லான், மிண்டார் குமிலிடன், வெருகெண்ணெய் அரக்கு சந்திராதி எண்ணெய்

5. நெருப்புக்காய்ச்சல் :
   1) கொதித்தாறிய நீரை அருந்துதல்
   2) ஈ மொய்க்காது பாதுகாக்கப்பட்ட உணவை அருந்துதல்
   3) மலத்தை சுகாதார முறையில் கழித்தல்
   4) கறுப்பு முந்திரிய பழங்களை உணவாக உண்ணுதல்
   5) பொரி அரிசி தெளிவு பருகல்
   6) முந்திரிகாடி, அமுதாதி குளிகை, மிருத்திய சஞ்சீவி, கண்டாவிழ்த குளிகை, வில்வவேர் கஷாயம்

6. வயிற்றோட்டம் :

1) கொதித்தாறிய நீரை அருந்துதல்
2 மலத்தை சுகாதார முறையில் கழித்தல்
3) ஈ மொய்க்காத உணவை அருந்துதல்
4) அடிக்கடி பொரி அரிசி தெளிவு உப்பு, சீனி கலந்து பருகல்
5 நற்சீரகம் கருக்கு குடிநீர் போட்டு தேன் கலந்து பருகல்
6) லசம்பு சுட்டு கரியாக்கி தேனில் குழைத்து நாக்கிற்றடவலாம்
7) அமுதாதி குளிகை கட்டுவாதி மாத்திரை, கபாட மாத்திரை, மிளகு குளிகை, மாதாள மோட்டுச் சூரணம், கோரைக்காடி

7 குருதியழுகல் நோய் (செப்ரிசீமியா) இந்நோய்க்கு நாம் சரியான முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளவில்லை. அதற்கு சந்தர்ப்பமோ வசதியோ கிடைக்கவில்லை.

1) நச்சுக் கிருமிகளை கட்டுட்படுத்தக் கூடிய சித்த மருந்துகள்
2) அழுகற் தன்மையை கட்டுப்படுத்தக் கூடிய மருந்துகள்
3) இரச மருந்துகள்
4) தங்கம் சோந்த மருந்துகள்
5) இரசாயன மருந்துகள்
6) இந்த வகையைச் சேர்ந்த மருந்துகளான நவரத்தின பூபதி, நவலோகபூபதி, நவரத்தினக் கட்டு மகா கண்டாவிழ்தம், பூரண சந்திரோதயம் முதலியன பலனளிக்கக் கூடியனவாகும்

**பாதிப்பு நோய்களும் பாதுகாக்கும் முறைகளும்**

1. மதுமேகம் (நீரிழிவு)
1) தமிழர் சுகாதார விதிகளை அனுசரித்தல்
2) பூரணமான உணவு உட்கொள்ளல்
3) குறைந்தளவு உடலுழைப்பில் ஈடுபடல்
4) உணவில் முருங்கையிலை, சிறுறிஞ்சாயிலை, கோவைபிலை, கறிவேப்பிலை, பாகற்காய் சேர்த்தல்
5) நன்பானம், ஆவாரைப்பானம், பாவித்தல்
6) நாவற்கொட்டை குளிகை, கறிவேப்பிலைச் சூரணம், மதுமேகச் சூரணம், அமுது சர்க்கரைச் சூரணம் சொர்ணாப் பிரக செந்தூரம், அப்பிரக நவநீதம், அப்பிரக பற்பம்

2. புற்றுநோய் :

1) செயற்கை இரசாயன உணவு முதலி வற்றைத் தவிர்த்தல்
2) இயற்கையோடு ஒட்டி வாழ்தல்
3) மண்பாத்திரங்கள் இரும்புப் பாத்திரங்கள், வெள்ளிப் பாத்திரங்களை பாவனை
4) இரசாயன மருந்துகள் பயன்படுத்தாத உணவு
5) நோய்த்தடுப்பு மூலிகைகளை உணவில் சேர்த்தல் வேப்பந்துளிர் தவசி முருங்கை, கறிவேப்பிலை
6) இரசபாடான மருந்துகள்

3. இருதயநோய் :

1) சமநிலை உணவு, கொழுப்புத் தவிர்த்தல்
2) ஏலம், உள்ளி, வெந்தயம், இஞ்சி நற்சீரகம் சேர்த்தல்
3) குறைந்தளவு உடலுழைப்பு
4) மன அமைதியை பேணல்
5) சாத்வீக குணத்தை கொண்ட ஆகாரம், நன்பானம்
6) உள்ளிக் குளிகை, அமிர்த ரசாயனம், அமிர்த சஞ்சீவி, தங்க செந்தூரம், மகா ஏலாதி, இராச ஏலாதி, தங்க ஏலாதி, சொர்ண பூபதி, அமிர்த ஏலாதி

4. மனநோய் (உளத்தாக்கம்)

1) அதிர்வுகளிலிருந்து பாதுகாத்தல்
2) அதிர்ச்சியினால் கலக்கமடையா திருத்தல்
3) மனக்கிளர்ச்சிகளை ஏற்படுத்தும் உணவை நீக்குதல், நன்பானம்

4) பயங்கரமான சூழலை தவிர்த்தல் அமைதியான இடத்தில் வசித்தல்
5) தலைக்கு சாந்த எண்ணெய்களை வைத்தல் சிற்றமட்டி எண்ணெய்
6) வல்லாரை சூரணம், பிரமி சூரணம், சிந்தாமணி செந்தூரம், கொம்பேலாதி குளிகை, அயதங்க செந்தூரம், கிருஷ்ண சதுர்முக செந்தூரம், பிரமி நெய்
7) மன அமைதிக்கான குடிநீர் (இராச சேகரம்

5. சுவாச நோய்கள் :

1) சுத்தமான காற்றை சுவாசித்தல்
2) மாசடையாத சூழலில் வசித்தல்
3) ஒவ்வாத உணவு, பான, உடை, சூழலை தவிர்த்தல்
4) கபத்தை அதிகரிக்க கூடிய உணவு செய்கைகளை தவிர்த்து கபத்தை குறைக்கக் கூடிய உணவு செய்கையை அனுசரித்தல்
5) கற்பூரவள்ளிச்சாறு, துளசிச்சாறு, ஆடாதோடையிலைச்சாறு இவைகளுடன் தேன் கலந்து பருகுதல்
6) வால்மிளகு, நற்சீரகம், அதிமதுரம் கசாயம் செய்து கற்கண்டு கலந்து பருகுதல்
7) திப்பிலிரசாயனம், ஆடாதோடை லேகியம், சுவாசகுடோரி குளிகை, சின்ன சிவப்பு குளிகை, சிந்தாமணி தூள், ஆடாதோடைப்பாணி, அதிமதுர சத்து, அதிமதுரப்பாணி

6. விபத்துக்கள் :

1) வீதி ஒழுங்குகளை கடைப்பிடித்தல்
2) பள்ளம், கிடங்குள்ள சீர்கேடான பாதைகளை தவிர்த்தல், திருத்துதல்
3) தாக்குதல் நடைபெறுமிடங்களை தவிர்த்தல்
4) புத்தியை பயன்படுத்தி கருமமாற்றுதல்
5) உடன் சரியான முதலுதவியை அளித்தல்
6) சிகிச்சைக்கு ஏற்ற ஒழுங்குகளை செய்தல்

7. விடக்கடிகள் :

1) விடசெந்துக்கள் பரவாது சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக பேணுதல்
2) பாதணி, வெளிச்சத்துடன் இரவில் நடமாடுதல்
3) வி செந்துக்கள் நடமாடும் இடங்களில் இரவில் படுக்கும் போது வெங்காயம் சிலவற்றை தட்டி யணக்க விடுதல்
4) முதலுதவியை விரைவாக செய்தல் (குலசேகரம் பார்க்கவும்)
5) ஆரம்ப சிகிச்சைகளை செய்தல், வாழைமடல் சாறு, கஞ்சாங் கோரைச்சாறு, வேப்ப நெய்
6) விடப்பத்தியம், உறங்கக்கூடாது, நடமாடக்கூடாது, தைரியமாக இருத்தல், பசுப்பால், கறுத்தச் சாமி, பயறு
7) விடசங்காரி, காக்கணங்கோவைக் குளிகை, சஞ்சீவி குழப்பு, அவுரி வேர்ச் சூரணம், அழிஞ்சல் வேர்ப் பட்டை ரணம்,

தமிழர் சுகாதாரம் என்ற நூலிலே சித்த வைத்திய சுகாதார விதிகள் விபரமாக தெரிவிக்கப்பட்டுள்ளன பெரும்பாலும் எல்லா விதமான நோய்களையும் தமிழர் சுகாதார விதிகளை கடைப்பிடிப்பதன் வாயிலாக தவிர்த்துக் கொள்ள முடியும். நோய் ஏற்பட்டு மருந்துகளுக்காக செலவு செய்து வேதனைகளை அனுபவிப்பதிலும் பார்க்க நோய் வராது தடுக்கும் வழிமுறைகளைக் கடைப்பிடித்து தடுப்பு மருந்துகளையும் பயன்படுத்தி மகிழ்ச்சியுடன் கூடிய சுகவாழ்வு வாழ்வோமாக.

மறுப்பதுடல் நோய் மருந்தெனலாகும்
மறுப்பது உளநோய் மருந்தெனல்சாலும்
மறுப்பது இனி நோய் வரா திருக்க
மறுப்பது சாவை மருந்தெனலாமே

திருமூலசித்தர்

**வைத்திய பேரறிஞர்**
**க. பாலசுப்பிரமணியம்**
தவிசாளரும், பிரதம வைத்திய
ஆராய்ச்சியாளரும்
சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம்
யாழ்ப்பாணம்

# COPHARM A HISTORICAL INEVITABILITY

The Copharm project is a joint venture of Co-operatives and Medical specialists of Tamils. Whenever the acute necessity arises for survival, it becomes inevitable to hold on to any-thing that is near and in easy reach. The health system of Tamils dates back to 12 000 to 15,000 years. But due to non recognition and non patronage of foreign rulers, this fulfledged medical syst m lost its fame and honour. With the outbreak of civil war in June 1990, the people of the Northern region were deprived of the supply of food items including drugs and as a result the very existance of these people were threaten-ed. Naturally war brings in health hazards. Non-availability of transport facilities accelarated the miseries to unpredictable degree.

This is the opportune time for any person who can offer a substancial alternative, assuring the proper substitu-tion to the Western medicine hitherto was relied upon for cure and preven-tion. The effectiveness and economi-cally affordable are only a part of the new system of alternative had to offer. Beside this, a modernised and popularly practising method too have to be ex-tended to public so as to convince a highly literate Society.

These chalenges are rightly and ad-mirably accep'ed by the sponsors of Copharm. To accomplish the aforesaid expectotions the Copharm was basically insta led in two main aspects.

1. Promotion and popularising of the Siddha Medicine that is widely practised by Tamils by and large still at home.

2. Research and Development of this alternate health system to suit the present trend and in parall elwith all other forms of medical system.

To achieve these objects the Copharm project was formally launched on 1992.6.15 at Chithankerny under the name (Co-operative Pharmacy- "Co-pharm") with Mr. T. Sabaratnam Assis-tant Commissioner of Co-operative Deve-lopment (Palm Development) function-ing as the President of the Board of Directors.

The Northern Province Palm Develop-ment Co-operative Societies, Union in-itially undertook to finance this project was intended to make use of Palm based products as part of the inputs for the manufacture of medicines.

Secondly this Health system is still practised widely among the Tamil com-munity. Their confidence level in this indigenous system was relatively high.

The most important role was entrus-ted to Vaidya Peraringer Dr. K. Bala-subramaniam Chairman of the Siddha Medical Research Centre and the Hono-rary Adviser of this Project. The manu-facture of medicine and the release of products are directed by him. The Siddha Medical Research Centre is an independant body engaged in the shap-ing of an alternative Health Care Service is responsible for idventing and inducing the practice of these pro-

ducts. Dr. Balasubramaniam who has successfully introduced 50 herbal Tinctures from the Palmyrah Alcohol first time in the history of the Medical World. Siddha Pharmacists are trained in the Siddha Medical Research Centre and they are engaged in charge of the Siddha Dispensaries which are being run by the Palm Development Co-operative Societies of North Lanka. They are deemed to be the pioneers in the whole world in introducing Phamacists in Siddha Medicine. Qualified Phamacists are not in anywhere engaged in the field of Siddha Medicine other than in Jaffna.

Siddha medical Healrh assistants are also trained in the Research Centre with the collaboration of the Department of Co-operative of the North-Eastern Province. These Health Service volunteers are sponsored by the Palm Development Co-operative Societies. It is a joint venture of Siddha Medical Co-operative Society and Lanka Siddha Medical Resarch organisation. Around 20 villages have beed brought under the Siddha Health Care Service within the Penensula now. If sufficient financial assistance are found these services could be extended to more areas of sufferings. Siddha Medical Co-operative Society procuces and supplies medicines mostly from the locally available Herbs and resources like Palmyrah sugar, Jaggery, Sugar Candy, Alcohol, Palmyrah trickle & Toddy which are the prime products of the Palm Development Co-operative Societies. These products are used as base materials for Siddha Medicines with the approved authority of the Siddha Medical Research Centre. Dr. K. Balasubramaniam is the cheif medical Research scholar of this Research Centre. He has successfully introduced 30 new Cady preparations (Medicated Wines) from Palmyrah Products as a Creditable new inventor of the century.

To provide a better health service the Research Centre engages in producing not only medicines but other health care items as well. A health promoting Herbal Drink is the latest addition to the market which is named "Nanpanam" (Reliable Drink) or(Health Drink), which hails as a substitute for hot drinks. A Herbal gripe water is also in the line of production of the copharm. Bathing powder is introduced to control skin problems and at the same time it serves as a substitute for the soap in clencing the skin.

The Siddha Medical Co-operative Society claims to be the first organisation of this kind founded for Siddha Medicine in the Co-operative World, Mr. T. Sabaratnam the Assistant Commissioner of Co-operative Development in charge of the Palm Development in Northern Region has contributed by officiating as the President of this Co-operative to make the Copharm Project a successful one by his untiring efforts. A total number of 10 Copharm sales Centres have undertaken the selling of Siddha Medicines in the Districts of Jaffna, Killinochchi and Mullaitivu. Over 150 varied varieties of drugs are now being produced by this Co-operative Pharmacy. Siddha Medical Co-operative Society have undertaken not only the productions, distributions, health services and medical services but it is also in the process of conducting Seminars, Meetings, Discussions, publications and exhibitions in promoting the Siddha

system of me.'cine under the advice of Dr. K. Balasubramaniam.

Some of the preparations are much popular among the ailing patients like "Madu Meha Choorna" (Antidiabetic powder) "Adathodai Pani" (Compound syrub of Vasaka-very effective for respiratory diseases) which products are purely of herbal outputs. "Munthiri Cady" is effective in controling Typhoid and "Seenthil Cady' which is found to be very much successful for Malaria, the man killer disease.

Vaidyachariny Dr. (Mrs) B. Rathadevy who functions as the Managing Director of the Copharm is rendering a valuable services in the rapid growth of this pharmacy.

Within a year, the organisation grew to an extend to which the existed structure was completely inadequate. Hence from 1993.05.01 the Copharm project became a self styled institution organised in Co-operative way and Known as Siddha Medical Co-operative Society Limited and formally got registered on 1993.12.18. During the observation period the Society has proved both its economic viability and its effective penetration into the net work of the distribution of the medicine. The quality of all medicine produced in Copharm is certified by a team of approved Doctors from outside the Copharm. 90% of the Siddha medicinal requirements within the peninsula is being catered now by this Co-operative Society. Very recently the products crossed over to the Northern mainland covering Kilinochchi, Mullaitivv. Mannar and Vanni.

As stated at the outset, merely producing traditional medicines in the traditional methods are in no way compatible to a Society used to modern standards. To fulfill this aspiration machinaries are gradually introduced to make the products more attractive and available in easy packages. Secondly a manual detailing the illness and the treatment for same with the products are published and sold together with the products at marginal cost.

Above all, a comprehensive scheme is drawn with a view to cover the less privilaged starta of the Society under an umbrella known as "National Health Service". Educated young women are engaged and trained by competant medical personnel at the Siddha Medical Research Centre. The extensive Training Programme prepares the participantes to take this service to the grass root level i.e. to the most remote areas where the awareness for a health system is pathetically low or in complete neglect. The Palm Development Co-operatives will provide all infra structure facilities and the cost of establishment.

The Copharm within a short time proved its effectiveness and gained a solid ground for its own standing. The coming years will be vouched for its stretching out efforts and achieving the institutional goals.

**S. Kandasamy**

*District Co-operative Development Officer*

1993 .5 .31

# சித்த வைத்திய சுகாதார சேவை

## சுகவாழ்வே சிறந்த செல்வம்

எமது மக்கள் தேக சுகத்துடனும், புயபலத்துடனும் வாழ்ந்தாற்றான் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியுடனும் வாழ முடியும். உணவு பற்றாக்குறையினா லும் மருத்துவ வசதிகள் இல்லாமலும் மருந்துகளின்றியும் எம்மவர்கள் நலி வடைந்துள்ளார்கள். இதனால் மலேரியா, நெருப்புக் காய்ச்சல், விசக்கடி, செப்ரிசீமியா (நச்சுக்கிருமிகள்) போன்ற நோய்களினால் தமிழர்களில் குறைந் தது பத்துப் பேர் வரையில் தினமும் மடிவதாக பத்திரிகைகளில் செய்தி வந்து கொண்டிருப்பதை பார்க்க நெஞ்சு துடிக்கிறது. இதனை தடுப்பது எவ்வாறு, எமது மக்களை இம் மரணங்களின் பிடியிலிருந்து காப்பது எங்ஙனம் என்று சிந்தித்து செயல் வடிவம் கொடுத்த திட்டமே கோபாம் மக்கள் மயப்படுத்தல் ஆகும். நாட்டுக்காக உழைக்கும் உத்தமர்களாகிய உங்களைக் காக்கவே சித்த வைத்திய சுகாதார தொண்டர் சேவை செயற்படுத்தப்படுகின்றது. உயிர் காக்கும் மருந்துகளை கிராமம்தோறும் கிடைக்கச் செய்வதற்காக கோபாம் மருந்து விற்பனை நிலையங்களை திறந்து வருகிறோம். தகுதியானவர்கள் மருந்துகளை கையாள வேண்டும் என்பதற்கிணங்க மருந்தாளர்கள் பயிற்றப் பட்டு வருகின்றார்கள். பனை வள கூட்டுறவுச் சங்கங்கள் சித்த மருந்துகளை உற்பத்தி செய்து அவற்றின் வரலாற்றில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன என் றால் மிகையாகாது. வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் பனை உற் பத்திப் பொருட்களைப் பயன்படுத்தி புதிய முறையில் பல புதிய மருந்துகளை கூட்டுறவு மருந்துச்சாலையில் தயாரித்து வருவதை நாம் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம், சித்த வைத்திய கூட் டுறவுச் சங்கம், பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்தே தமி ழர் சுகாதார சேவைகளை நடாத்தி வருகின்றார்கள்.

எமது பிள்ளைகளே சுகாதார சேவையாளர்களாக பயிற்றப்பட்டு சேவைக்கு வருகின்றார்கள். நாமும் நமது மக்களும் தகுந்த முறையில் இத் தொண்டர்களைப் பயன்படுத்தி நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்து சுகவாழ்வு வாழ்வோமாக.

1966ம் ஆண்டிலிருந்து உலக சுகாதார தாபனம் சகல தேசங்களிலும் சுகாதாரத்தைப் பேணுவதற்கு தேசிய மருத்துவ முறைகளை ஊக்குவித்து வருகின்றது. இன்று நாம் எமது சித்த மருத்துவ முறையை வளர்த்து எம் முடைய சுகத்தைப் பேணுவதில் ஆர்வமுடன் உழைத்து வருகிறோம். எமது தொண்டர்கள் உங்கள் சுகாதார தேவைகளை கவனிப்பார்கள். தேவையான மருந்துகளை உங்களுக்கு விநியோகிப்பார்கள்.

*சுவர் இருந்தாற்றான் சித்திரம் உடல் இருந்தாற்றான் உழைப்பு.*

வாழ்க பனை வள சங்கம், வாழ்க சித்த மருத்துவம்,
வளர்க சுகாதார சேவை

**சா. செல்வரெட்ணம்**
தலைவர்
வடமாகாண பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

# சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## பதிவு இல. J.P./2159 — திகதி 18-21-1993

# இயக்குநர் சபை

திரு. தி. சபாரத்தினம், கூ. ஆ. உ. ஆ. (ப/அ) — தலைவர்

திரு, சா. செல்வரத்தினம், தலைவர், வடமாகாண — துணைத் தலைவர்
ப. தெ. கூ. ச. சமாசம்

திரு. வி. கே. அருந்தவநாதன் கூ. அ. உத்தி — செயலாளர்

திரு. பொ. சின்னராசா, தலைவர், சாவகச்சேரி. ப. தெ. — உறுப்பினர்
கூ. சங்கம்

திரு. பொ. சத்தியமூர்த்தி, பொது முகாமையாளர் — உறுப்பினர்
வடமராட்சி ப. தெ. கூ. ச. கொத்தணி

திரு. செ. செல்வராசா, நிர்வாக உறுப்பினர் — உறுப்பினர்
வலிகாமம் ப. தெ. கூ, ச. கொத்தணி

திரு. மா. குணசிங்கம் — நிர்வாக உறுப்பினர் — உறுப்பினர்
யாழ். ப. தெ. கூ. ச. கொத்தணி

வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் கௌரவ சிறப்பு ஆலோசகர்
தலைவர், சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையம்

வைத்தியாச்சாரிணி பா. இராதாதேவி — முகாமைப் பணிப்பாளர் சி. வை. கூ. க.

திரு. பொ. கணேசலிங்கம், த. கா. ப. — கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்

## உறுப்புரிமைச் சங்கங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அரியாலை | 2. | சுன்னாகம் | 3. | யாழ்ப்பாணம் |
| 4. | கரவெட்டி | 5. | கோப்பாய் | 6. | அச்சுவேலி |
| 7. | சங்கானை | 8. | சாவகச்சேரி | 9. | கோண்டாவில் |
| 10. | பளை | 11. | பருத்தித்துறை | 12. | தெல்லிப்பளை |
| 13. | கொடிகாமம் | 14. | மானிப்பாய் | 15. | பண்டத்தரிப்பு |

### ப. தெ. வ, அ. கூ. சங்க கொத்தணிகள்

1. யாழ்ப்பாணம் 2. வடமராட்சி 3. தென்மராட்சி 4. வலிகாமம்

சமாசம் : வடமாகாண ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்

**வி. கே. அருந்தவநாதன்**
கூ. அ. உ.
செயலாளர்
சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்

572, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்

# எமது நோக்கங்கள்

1. பனை தென்னை வள உற்பத்திகளையும் உள்ளூர் மூலிகைகளையும் மூலப் பொருளாகக் கொண்டு உண்ணாட்டு மருந்து வகைகளை தயாரித்து விற்பனை செய்தல்.

2. மருந்துகளுள் தொடர்புடைய சுகாதாரப் பொருட்களை தயாரித்தல், விற்பனை செய்தல்.

3. பனை தென்னைவள உற்பத்திகளை புதிய முறையில் பயன்படுத்தி மருந்துகள் தயாரித்தல், விற்பனை செய்தல்.

4. உள்ளூர் மூலிகைகளைக் கூடுதலாகப் பயன்படுத்துதல்.

5. உள்ளூர் மூலிகைகளை ஆராய்ச்சிசெய்து புதிய மருந்துகளைத் தயாரித்தல்.

6. மருந்து தயாரிப்புக்கு நவீன சாதனங்களைப் பயன்படுத்தல், புதிய முறைகளைக் கையாளுதல்.

7. தமிழ் தேசிய சுகாதாரத்தைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

8. மூலிகை வளர்ப்பை ஊக்குவித்தல்.

9. உண்ணாட்டு மருந்துகளின் பாவனையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.

10: தமிழரின் சித்த மருந்துத்துறை முன்னேற்றத்திற்கு ஆவன செய்தல்.

கூ. அ. உ. ஆணையாளர் (ப/அ) அவர்கள் தலைமையில், சிறப்பு ஆலோசகா வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனையுடனும் வழிகாட்டலுடனும், மேற்பார்வையிலும், முகாமைப் பணிப்பாளர் வைத்தியாச்சாரிணி பா. இராதாதேவி அவர்களின் நிர்வாகத்தில் எமது நோக்கங்களில் பலவற்றை நாம் நிறைவு செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

செ. செல்வராசா
இயக்குநர் சபை உறுப்பினர்
சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்

# தெங்கின் மருத்துவம்

தென்னை மரம் பூலோக கற்பக விருட்சமாக கருதப்படுகிறது. தமிழர்களின் வாழ்வோடு ஒன்றாக கலந்துள்ளது தெங்கு ஆகும். இந்த மரம் எமது மண்ணுக்கு சொந்தமானது. தெங்கு, தென்னை, தென்னம்பிள்ளை, தென், நாளிகேரம், தாழை, இலாங்கலி, புல்மரம் எனப் பல்வேறு பெயர்கள் உண்டு இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் காணப்படுகின்றது. இந்தியா பர்மா, வங்காளம், மலையாளம் ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றது. பிள்ளைகளை வளர்ப்பது போல தமிழர் தென்னைகளை வளர்ப்பதனாலேயே தென்னம்பிள்ளை என்ற பெயர் வரலாயிற்று. தென்னை தனியாக தோட்டங்களாக பயிரிடப்பட்டு வளர்க்கப்படுகிறது. இதன் எல்லா உறுப்புகளும் பயன் தருவதாலேயே பூலோக கற்பக விருச்சம் என்ற பெயர் வந்தது.

தென்னம்பாளையை சீவி கள்ளெடுக்கலாம். சூரியன் உதயம் ஆவதற்கு முன் இறக்கப்பட்ட இனிப்புள்ள கள்ளில் சிறிதளவு சீரகம், ஏலம், கற்கண்டு, கலந்து விடியற்காலையில் குடித்து வர சுறுசுறுப்பும், தேக பூரிப்பும், தேக குளிர்ச்சியும் உண்டாகும். கள்ளில் இருந்து காடி, காடி மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

தென்னை மரவேர் சிறுதுண்டுகளாக நறுக்கி நூறு கிராம் எடுத்து நானூறு மில்லி லீற்றர் நீர் விட்டு இருநூறு மில்லி லீற்றராக வற்ற வைத்து தினமும் இருவேளை குடித்து வர கெற்ப வாயுக்குத்து முதலிய ரோகங்கள் நீங்கி கருப்பை சுத்தமாகும். மகோதரம், பாண்டு, அடிவயிற்று நோ, சூட்டு வாயு தீரும்.

தென்னம்பூ, நீற்றுக்காய் நெய், கையாந்தாரை லேகியம், நீற்றுக்காய் லேகியம், தென்னம்பாளை லேகியம் ஆகிய மருந்துகள் இதன் சாற்றில் இருந்து தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாடு, வெள்ளை, எலும்புருக்கி, சிறுநீர் கடுப்பு, காமாலை, கிரகணி, பசியின்மை, உள்வெப்பு, பித்த பாண்டு தீரும். தென்னம் குரும்பை கயர் வயிற்றுப் போக்கு, இரத்தப் போக்கு மாந்தம் போக்கும்.

முற்றிய தென்னையின் பட்டையை வெட்டி உலர்த்தி தூளாக்கி 50g தூளை 150 மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தோல் நோய்களுக்கு பூசலாம். தேமல்களுக்கும், சொறி தோலில் ஏற்படும் வெடிப்புக்கும் சில நாட்கள் பூசி வர நீங்கும்.

மூலத்தால் இரத்தம் போவதை நிறுத்தவும், உடல் சூட்டை தணிக்கவும், மார்பில் உள்ள சளியை வெளியேற்றவும் தென்னம் குருத்தை உண்டு வர வேண்டும்.

தென்னம்மட்டைச்சாறு அருந்தி வர வயிற்றுக்கடுப்பு, மலவாசல், சிறுநீர்கடுப்பு, அதி மூத்திரம் கட்டுப்படும். சில விடக்கடிகளுக்கு இந்த சாறு குடிநீராக பயன்படுகிறது.

தேங்காய் எண்ணெய் புண்களையும், தோல் நோய்களையும் நீக்குகிறது. தலை மயிரை நன்றாக வளரச் செய்கின்றது.

தென்னம் சாராயம் வயிற்றுநோ, குடல் நோ, அடிகாயம், முறிவு, நெரிவு போன்ற நோய்களில் மருந்தாக பயன்படுகின்றது.

இளநீர் உடற் சூட்டை தணித்து குளிர்ச்சியை கொடுக்கின்றது. அழற்சியை ஆற்றுகின்றது. சிறுநீரை வெளியேற்றுகின்றது. களை, சோர்வு, தாகம், உடற்தளர்ச்சி, சலஎரிவு, கண்ணோய், தலைநோய், வாய் அவியல் நீங்கும். இத்தகைய மருத்துவ பயன்பாடு மிகுந்த தென்னை மரத்தைப் பேணி வளர்ப்பது நம் எல்லோருடைய கடமையுமாகும்.

தேங்காய்ப் பால் வாய் அவியல், குடல் அவியல், வேக்காடு இவற்றை நீக்கும் வெளிப்பாவிப்பில் வியற்குரு, தோல் வியாதிகள் நீங்கும். மாங்காய்ப்பாலை முறிக்கும்.

சிரட்டை தோல் ரோகங்கள், தோலின் நிறம் மாற்றங்கள் இவற்றை எண்ணெய் இறக்கி பாவிக்கும் பொழுது நீக்குகிறது. சிரட்டை கரி குடலில் ஏற்படும் எண்ணெய் சிக்கை நீக்கும்.

தென்ன ஓலையை தலையிடிக்கு சுற்றிக் கட்டினால் நீங்கும்.

கொச்சிமட்டை சிலந்தி கடிக்கு சாறு பிளந்து கொடுப்பார் நெருப்பில் வாட்டி ஒத்தனம் கொடுப்பார்.

**செல்வி க. பிறேமலதா**
*வைத்திய மாணவி Iம் வருடம்*
*சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம்*

# கோபாம் மருந்துகளின் பட்டியல்

## குளிகைகள்

1 புன்னைவேர் குளிகை
2 சுவாசகுடோரி குளிகை
3 வாதராட்சதன் குளிகை
4 உள்ளிக் குளிகை
5 கிருமிக் குளிகை
6 சின்னச் சிவப்பு குளிகை
7 பாலசஞ்சீவிக் குளிகை
8 கபாட மாத்திரைக் குளிகை
9 பாலர் கோரோசனைக் குளிகை
10 சிறுவர் கோரோசனைக் குளிகை
11 பெரிய கோரோசனைக் குளிகை
12 இராமபாணக் குளிகை
13 காக்கணவன் கோரோசனைக் குளிகை

## காடி மருந்துகள்

1 ஊமத்தைக் காடி
2 சூரத்தை நிலவரைக் காடி
3 அயக் காடி
4 முப்பலைக் காடி
5 சிற்றமட்டிக் காடி
6 கோரைக் காடி
7 சீரகக் காடி
8 அமுக்கிராய்க் காடி
9 அசோகம்பட்டைக் காடி
10 மருதம்பட்டைக் காடி
11 நன்னாரிக் காடி
12 கடுக்காய்க் காடி
13 சாறணைக் காடி
14 சந்தனக் காடி
15 இலாமிச்சக் காடி
16 தாமரைக் காடி
17 திப்பிலிக் காடி
18 முந்திரிக் காடி
19 தசமூலக் காடி
20 வேப்பம்பட்டைக் காடி
21 கற்பூர திராவகம்
22 கிட்டக் காடி
23 கருகாலிக் காடி
24 அத்திக் காடி
25 பனங்கள்ளுக் காடி
26 முடக்கற்றான் காடி
27 தென்னங்கள்ளுக் காடி

## பாணிகள்

1 ஆடாதோடைப் பாணி
2 அதிமதுரப் பாணி
3 சித்த சீவாமிர்த பாணி

## லேகியங்கள்

1 நெல்லிக்காய் லேகியம்
2 நீற்றுக்காய் லேகியம்
3 அமுக்கிராய் லேகியம்
4 தேற்றான்கொட்டை லேகியம்

## பற்பம்

1 சிங்கி பற்பம்
2 சிலாசத்து பற்பம்
3 பலகறை பற்பம்
4 சங்கு பற்பம்
5 ஆமைஓட்டு பற்பம்

## செந்தூரம்

1 அயகாந்த செந்தூரம்
2 அன்ன பேதி செந்தூரம்
3 படிகலிங்க செந்தூரம்
4 பூங்காவி செந்தூரம்
5 லிங்க செந்தூரம்
6 ஆறுமுக செந்தூரம்
7 காந்த செந்தூரம்

## எண்ணெய்கள்

1 சிரங்கு எண்ணெய்
2 மெழுகு எண்ணெய்
3 கரப்பான் எண்ணெய்
4 பச்சை எண்ணெய்
5 வெற்றிலைச்சாற்று எண்ணெய்
6 பொன்னாங்காணி எண்ணெய்
7 கிரந்தி எண்ணெய்
8 நீலியாதி எண்ணெய்

9 பிருங்காமில எண்ணெய்
10 வாதநாச எண்ணெய்
11 வேலம்பட்டை எண்ணெய்
12 தாளங்காய் எண்ணெய்
13 இயங்கம்வேர் எண்ணெய்
14 பீனிச எண்ணெய்
15 குமரி சந்தனாதி எண்ணெய்
16 சற்பூர எண்ணெய்
17 மிளகு சந்தனாதி எண்ணெய்
18 அமிர்த சந்தனாதி எண்ணெய்
19 மகாநீலிபாதி எண்ணெய்
20 பெரும் கிரந்தி ஏண்ணெய்

**களிம்பு**

1 புண் களிம்பு
2 உடன் காய மருந்து
3 பூச்சுத் தூள்

**சூரணங்கள்**

1 பறங்கிக் கிழங்குச் சூரணம்
2 சுக்குச் சூரணம்
3 அமுக்கிராய்ச் சூரணம்
4 நில பாவற் சூரணம்
5 கொத்தமல்லிச் சூரணம்
6 சாராய ஊறற் சூரணம்
7 மது மேகச் சூரணம்
8 கந்தக இரசாயனம்
9 சிவகரந்தைச் சூரணம்
10 தளிசாதிச் சூரணம்
11 தாளிச பத்திரி சூரணம்
12 சிந்தாமணித் தூள்
13 திரி பலாதி சூரணம்
14 மானி பத்திர சூரணம்
15 முடக்கு சூரணம்
16 சம்பாதிச் சூரணம்
17 பெருங்காய சூரணம்
18 மாதாளமொட்டு சூரணம்
19 அட்ட சூரணம்

**சத்துக்கள்**


1 சிறுநாகம் பூ
2 தேங்காய்ப்பூககீரை
3 சீநதில்
4 நில வேம்பு
5 நற்சீரகம்
6 இஞ்சி
7 சோம்பு
8 சாத்தாவாரி
9 தான்றிக்காய்
10 திற்பலி
11 தூதுவளை
12 நன்னாரி
13 வேப்பம்பட்டை
14 கொத்தமல்லி
15 பேய்ப்புடோல்
16 கிருமிசத்துரு
17 இக்கிரி
18 சூரச்தாமரை
19 பிரமி
20 நெருஞ்சில்
21 நெல்லிக்காய்
22 அதிமதுரம்
23 அத்திப்பட்டை
24 அமுக்கிராய்
25 சித்தரத்தை
26 ஆடாதோடை
27 ஏலம்
28 ஓமம்
29 கடுக்காய்
30 கண்டங் கத்தரி
31 கறுவாப்பட்டை
32 கருவேலம்பட்டை
33 கற்பூரவள்ளியிலை
34 காக்கணவன்
35 கராம்பு
36 கீழ்க்காய் நெல்லி
37 கோரைக்கிழங்கு
38 சதகுப்பை
39 பற்படாகம்
40 இலவங்கப்பட்டை
41 பெருங்காயம்
42 பொடுதலை
43 மஞ்சிப்டி
44 மரமஞ்சல்
45 மருதம்பட்டை
46 மாயக்காய்
47 மிளகு
48 வாய்விடங்கம்
49 வசம்பு
50 முடக்கொத்தான்
51 வில்வம் பழம்
52 விஷ்ணுகிராந்தி
53 உள்ளி



திரு. பொ. சத்தியமூர்த்தி
உறுப்பினர் இயக்குநர்சபை, சி. வை கூ. சங்க பொது முகாமையாளர், வடமராட்சி ப. தெ. கூ. ச கொத்தணி

# சித்த மருந்துகளின் தரநிர்ணயம்

வைத்திய கலாநிதி நு. சண்முகராசா
வைத்திய அதிகாரி, வலிமேற்கு பிரதேச சபை, சுழிபுரம்



எல்லா நாடுகளிலும் மருந்துகள் தர நிர்ணயத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. நோயாயர்களுக்கு சிறந்த தரமான மருந்துகளை வழங்குவதன் மூலமே நோய்களை பக்க விளைவுகள் இன்றி சுலபமாக சுகப்படுத்த முடியும் எனலாம். கீழைத்தேய மருந்துகளைப் பொறுத்த வரையில் மருந்து நூல் முறைப்படி அநுபவமும், தேர்ச்சியும் வாய்ந்த வைத்தியர்கள் தாங்களாகவோ, தங்கள் மேற்பார்வையில் தயாரிப்பதன் வாயிலாகவோ மருந்தின் தரத்தை உறுதிப்படுத்தி வந்துள்ளார்கள் ஒவ்வொரு வைத்தியரும் மருந்துகள் தயாரிப்பதில் போதிய பயிற்சியும், அநுபவமும், திறமையும் பெற்று இருந்தார். அவ்வாறு தகமை பெற்றவர்களாலேயே சிறந்த தரமான மருந்துகளை தயாரிக்க முடியும். ''ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது'' என்பது போல் புத்தகப் படிப்பு திறமையை வழங்காது. ஆகவே பயிற்சியும், தேர்ச்சியும் இன்றியமையாதவை. தமது வைத்திய கல்வியின் போது போதிய பயிற்சியின்றி பட்டம் பெறும் வைத்தியர்களால் தரத்தை தீர்மானிக்க முடியாது. அந்த வைத்தியர்கள் தாங்கள் தரமான மருந்துகளை பெறுவதற்காக மருந்துகளின் தர நிர்ணயத்தை தகுதி வாய்ந்தவர்கள் செய்ய வேண்டியுள்ளது. அனுபவமுள்ள வைத்தியர்களினால் பயிற்சி பெற்ற மருந்துகளின் தரத்தை பரிசீலித்து அறிய முடியும். மருந்துக் கடைகளில் தரம் பரிசீலித்தே அவர்கள் மருந்துகளை கொள்வனவு செய்கிறார்கள்.

1951ம் ஆண்டு முதல் வைத்திய அதிகாரிகளே மருந்துகளின் தரத்தை நிர்ணயம் செய்து மருந்துகள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்பதை உள்ளூராட்சி ஆணையாளர் தமது சுற்று நிருபம் வாயிலாக அறிவுறுத்தி உள்ளார்.

1974 முதல் ஆயுள் வேத கூட்டுத்தாபன மருந்துகள் விநியோகத்தில் இருந்தது. கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்களே அங்கு உற்பத்தி செய்யும் மருந்துகளின் தரத்தினை உறுதிப்படுத்துகிறார்கள். தயாரிப்பில் உள்ள வைத்தியர்களை இந்தியாவிற்கு பயிற்சிக்கு அனுப்பி பயிற்சி பெற்றதன் பின்னரே தரமான மருந்துகள் தயாரிக்கப்பட்டன.

கீழைத்தேச மருந்துகள் இரசாயனப் பகுப்புக்கு உட்படுத்தப்படுவதில்லை. கீழைத்தேய மருந்துகளின் மூலக் கூறுகள்

எல்லாம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை மேனாட்டு மருந்துகள் எல்லாம் ஒரு சில மூலக்கூறுகளைக் கொண்டவைகளே. அவற்றை ஆய்வு செய்வது சுலபமானது. அடையாறு மருந்துச்சாலையில் சில மருந்துகள் ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுகின்றன. அங்கும் தரத்தை நிர்ணயம் செய்வதற்கு என்று சில வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளார்கள். அடையாறு மருந்துச்சாலை இந்திய வைத்திய கூட்டுறவுச் சங்கத்தினால் நடாத்தப்படுகின்றது. அதனால் அங்கு மருந்துகள் உயர்ந்த தரத்தில் உள்ளன. இதே போல் இலங்கையிலும் சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்துகள் யாவும் தர நிர்ணயக் குழுவினால் தரம் பரிசோதிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்னரே நல்ல தரத்தில் விற்பனைக்கு வருகின்றன.

1993ம் ஆண்டு தை மாதத்தில் இருந்து தர நிர்ணயக் குழுவினர் தமது கடமையை செய்து வருகிறார்கள். உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், கூட்டுறவு விரிவாக்க உதவி ஆணையாளரும் கலந்து கொண்ட கூட்டத்திலேயே தர நிர்ணயக் குழுவினர் தெரிவு செய்யப்பட்டார்கள். உள்ளூராட்சி மன்ற இலவச வைத்தியசாலைகளில் தர நிர்ணயக் குழுவினால் தர நிர்ணயம் செய்யப்பட்ட மருந்துகளையே கொள்வனவு செய்து பாவிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. உள்ளூராட்சி சேவையை சேர்ந்த வைத்திய அதிகாரிகளான வைத்திய கலாநிதி பூ. கைலாயநாதன், வைத்திய கலாநிதி து. சண்முகராஜா வைத்திய கலாநிதி திருமதி நா. புருசோத்தமன் ஆகியோர் தர நிர்ணயக்குழுவின் அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டனர். மருந்துச்சாலைக்கு வெளியே உள்ள வைத்திய அதிகாரிகளினால் மருந்துகளின் தரம் நிர்ணயிக்கப்படுவது கூட்டுறவு மருந்துச்சாலையில் மட்டும் தான் நடைபெறுகின்றது எனலாம். கோபாம் மருந்துகள் தரத்தில் சிறந்து விளங்குவதற்கு தர நிர்ணயக் குழுவினரின் சேவையே காரணமாய் அமைந்துள்ளது. கோபாம் மருந்துகளை மக்கள் ஆவலுடன் வாங்கிச் செல்வதை நாம் அவதானிக்க கூடியதாகவுள்ளது. ஆனால் ஒரு சில உள்ளூராட்சி மன்றங்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்ற தரம் நிர்ணயிக்கப்படாத தனியார் மருந்துகளை கொள்வனவு செய்கின்றனர். அவர்களிடம் முன் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் தரமில்லாத காரணத்தினாலேயே கோபாம் அமைக்கப்பட்டது. விலை குறைந்த மருந்துகள் தரமுள்ளவையாக இருக்கமுடியாது. 1992ம் ஆண்டு தொடக்கம் ஒரிரு வைத்தியர்கள் கோபாம் மருந்துகளின் தரம் காணாது என்று சொல்லி வருகின்ற போதிலும் ஏனைய வட மாகாணத்தை சேர்ந்த வைத்திய அதிகாரிகள் எல்லோரும் கோபாம் மருந்துகள் சிறந்த தரமுடையன என்பதை பகிரங்கமாக உறுதிப்படுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார மகளிர் விவகார அமைச்சில் மாகாண ஆயுள் வேத பணிப்பாளர் வைத்திய கலாநிதி பூ. உரோமகேஸ்வரன் அவர்களும் அங்கு தயாரிக்கப்பட்ட மருந்துகள் எல்லாம் பரிசோதித்துப் பார்த்த பின்னர் கோபாம் மருந்துகள் நல்ல தரமானவை என்று கருத்து தெரிவித்துள்ளார்கள் என்பதை உங்கள் எல்லோருக்கும் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தர நிர்ணயம் செய்யப்படாத தனியார் மருந்துகளை தனிப்பட்ட காரணங்களுக்காகவே ஒரு சிலர் கொள்வனவு செய்கிறார்கள். எமக்கு தெரிந்த அளவில் குறைந்த விலையில் மருந்துகளை தரமாக தயாரிப்பது என்பது நடைமுறை சாத்தியமற்றது. சில தனியார் நிறுவனங்களால் முன்னர் குறைந்த விலையில் போலியான மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்ட பொழுது வைத்திய அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டு அவை திருப்பி கொடுக்கப்பட்டதை உள்ளூராட்சி வைத்தியர்களாகிய நாம் இன்னும் மறந்து விடவில்லை. போலி மருந்துகளை தரமானவை என்று கூறும் வைத்தியர்களையும் போலிகள் என்றே நாம் கூறவேண்டியுள்ளது. சில இடங்களில் மருந்தைப் பற்றி அறிந்து கொள்வார்கள். தரத்தைப்பற்றி கூறுவது வேடிக்கையானது. தர நிர்ணயம் செய்யப்படாத போலி மருந்துகளால் அதனை பாவிக்கும் மக்களுக்கு நன்மைக்கு பதில் தீமையே விளையலாம்.

பூரணமாக தயாரிக்கப்பட்ட மருந்துகளின் இலட்சணங்களை கொண்டு மருந்துகளின் தரத்தை பரிசோதித்து அறிய முடியும் என்பதை வைத்திய கலாநிதி திருமதி K. செல்வபாரதி அவர்கள் தகுந்த விளக்கங்களுடன் அன்றைய கருத்தரங்கில் எடுத்துக் கூறியதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஆங்கில மருந்துகளை பெருமளவுக்கு நம்பியிருக்கும்சில சித்தவைத்தியர்களினாலும் சித்த மருந்துகளின் தரத்தை உணர்ந்து கொள்வது மிக சிரமமாகும். சித்த மருந்துகள் செய்வதில் பயிற்சியோ, அநுபவமோ இல்லாதவர்களாலும் மருந்துகளின் தரத்தை அறிய முடியாது. கோபாம் மருந்துகளுக்கு மக்கள் காட்டும் அமோகமான வரவேற்பில் இருந்தே கோபாம் மருந்துகளின் செயல் திறனையும், தரத்தையும் நன்றாக புரிந்து கொள்ள முடியும். யாழ். குடாநாட்டிலுள்ள நூற்றுக் கணக்கான பிரபலமான மருத்துவர்கள் கோபாம் மருந்துகளை நேரடியாக கொள்வனவு செய்து வருகிறார்கள். கோபாம் மருந்துகள் சிறந்த தரமுள்ளவை என்பதற்கு இந்த புகழ் வாய்ந்த மருத்துவர்களின் மருந்து கொள்வனவு உரைக்கல்லாக அமைகின்றது. தமக்கு தேவையான மருந்துகளை கூட்டுறவு மருந்துச்சாலையிலேயே தொடர்ந்து கொள்வனவு செய்து வருவதன் மூலம் கோபாம் மருந்துகள் நல்ல தரமானவை என்பதை உறுதிப்படுத்தி, ஊக்கப்படுத்தி வருவதற்காக அவர்கள் நன்றி பாராட்ட வேண்டியவர்களாவர்.

## தர நிர்ணயக் குழு

வைத்திய கலாநிதி பூ. கைலாயநாதன்
*வைத்திய அதிகாரி வலி. மேற்கு*
*பிரதேச சபை, சங்கானை*

வைத்திய கலாநிதி து. சண்முகராஜா
*வைத்திய அதிகாரி*
வைத்திய கலாநிதி

திருமதி நா. புருசோத்தமன்
*வைத்திய அதிகாரி, இலவச வைத்தியசாலை*
*வலிவடக்கு பிரதேசசபை, மல்லாகம்.*

● —— ●

# Appraisal by John Gud Han

*District Co-ordinator - Jaffna Save the Children Fund*

At the national health services workshop inaugurated at the Valarmathy Community Centre of Achchelu in Kopay chaired by the Assistant Commissoner of, Co-operative development Mr. T. Sabaratnam; the District Co-ordinator of the "Save the Children Fund" Mr. John Gud Han graced the occasion as the chief guest and delevered the following.

I am thankful for having been invited to attend this unique event. I am also happy to learn about the importance of this indigenous medicine. The health services inaugurated here with a medicine belonging to Tamil race is a praisworthy attempt. Affter long researches the Western scientists have confirmed that the use of indigenous medicine is more effectful than the Western drugs.

I again express my thanks for having honoured me by inviting as the chief guest at this occasion. I also declare here that I would extend my possible assistance towards this services. It is appreciable that you selected an under developed area like this fot this important service.

Siddha Medicines "COPHARM" were introduced at this evnt to Mr. John Gud Han by Dr. K. Balasubramaniam the Consultant for Siddha Co-operative.

# மருந்துகளின் விபரம்

1. **லிங்க செந்தூரம்:-** சுரம், சன்னி, வலி, விரணம், வாயு, குத்தல், உளைவு தீரும்.
அளவு — 200mg.
குடிநீர்— நெய், வெண்ணெய், தேன்.

2. **அயகாந்த செந்தூரம்:-** பாண்டு, காமாலை, வாதம், பித்தம், கபம், சோகை, விந்துநட்டம் நீங்கும்.
அளவு — 200mg.
குடிநீர் — நெய், தேன்.

3. **காந்த செந்தூரம்:-** பாண்டு, காமாலை, சோகை, ஈரல் வீக்கம், மண்ணீரல் வீக்கம், களைப்பு, இளைப்பு தீரும்.
அளவு — 250 மி. கி.
குடிநீர் — தேன்.

4. **அன்னபேதி செந்தூரம்:-** சுரம், பாண்டு, காமாலை, சீதபேதி, காய்ச்சற்கட்டி (மண்ணீரல்வீக்கம்) தீரும்.
அளவு — 200 மி. கி.
குடிநீர் — தேன்.

5. **ஆறுமுக செந்தூரம்:-** பாண்டு, சூலை, வாதம், சன்னி, கிரகணி, காசம், மகோதரம், பிரமை, வாயு, மலடு, விடம் முதலியன தீரும்.
அளவு — 250 மி. கி.
குடிநீர் — நெய், தேன், திரிகடுகு, திரிபலாதி.

6. **ஆமையோட்டு பற்பம்:-** மூலம், ரத்தம் போதல், கடுப்பு, சிறுவர் மாந்தம், கழிச்சல் தீரும்.
அளவு — 200 mg.
குடிநீர் — நெய், தேன்.

7. **சிங்கி பற்பம்:-** உடல் சூடு, வெள்ளை சாய்தல், மார்புநோய், எலும்புருக்கி, களை, வரட்டிருமல் நீங்கும்.
அளவு — 400 கிராம்,
குடிநீர் —நெய், வெண்ணெய், தேன்.

8. **சிலாசத்து பற்பம்:-** சலக்கடுப்பு, சல எரிவு, வெள்ளை, பித்தம், உடற்சூடு நீங்கும்.
அளவு — 500 கிராம்.
குடிநீர் — வெண்நெய், நெய், தேன்

9. **பலகரை பற்பம்:-** மேகச்சூடு, நீர்கட்டு, குன்மம், விடம் தீரும்.
அளவு — 50 — 100 மி. கி.
குடிநீர் — நெய் + வெண்ணெய்.

10. **சங்கு பற்பம்:-** குன்மம், சூலை, சரும நோய், வயிற்றுக்கோளாறு, சூடு நீங்கும்.
அளவு — 200 மி. கி.
குடிநீர் — வெண்ணெய்.

11. **பெருங்காய சூரணம்:-** அசிரணம், வயிற்றுவலி, பசியின்மை, குளிர் விறைப்பு, வயிற்றுப்பொருமல் தீரும்.
அளவு — 250 — 500 மி. கி.
குடிநீர் — வெண்ணெய், சீனி, தேன்.

12. **அட்ட சூரணம்:-** குன்மம், அசிரணம், சூலை, வயிற்றுப்பெருமல், வயிறு பசியின்மை தீரும்.
அளவு — 250 — 500 கி.
குடிநீர் — தேன், வெந்நீர், சீனி.

13. **பெரிய கறுப்புத்தூள்:-** குத்துக்கழிச்சல், சன்னி, காய்ச்சல், வாதம், குன்மம், சுவாதம் தீரும்.
அளவு — 200 — 400 மி. கி.
குடிநீர் — தேன்.

14. **கடுக்காய் காடி:-** மலபந்தம், மூலரோகம், பசியின்மை.
அளவு 15 — 30 மி. லீ. 3 தரம்

15. **கருங்காலிக் காடி:-** சர்மரோகம், கிருமி ரோகம், வாதரக்தம்.
அளவு 15 — 30 மி. லீ. 3 தரம்

16. **வாய்வு எண்ணெய்:-** குத்துளைவு, பிடிப்பு, விறைப்பு, வாய்வு தீரும். வெளிப்பாவனைக்கு மட்டும்.

17. **மிளகு சந்தனாதி எண்ணெய்:-** தும்மல், மூக்கடைப்பு, மூக்கு நீர்ப்பாய்ச்சல்,

மண்டைக்கரப்பன், பீனிசம் தீரும். தலைக்கும் வைத்து மூக்கிலும் சில துளிகள் விடலாம்.

18. மகாநீலியாதி எண்ணெய்:- கண் ரோகம், மயிர் உதிர்தல், இளநரை, மயிர் வெடிப்பு தீரும். தலைக்கு வைக்கவும்.

19. பெருங்கிரந்தி எண்ணெய்:— எல்லா விதமான கிரந்திகள், அவியல், கரப்பன், புண்புரைகள், கிரந்தித்தொய்வு தீரும். உள், வெளி, தலைக்கும் பாவிக்கலாம்.

20. அமிர்த சந்தனாதி எண்ணெய்:— உச்சி கொதி, உடற்சூடு, தும்மல், கண் ரோகம், இளநரை தீரும். தலைக்கு வைக்கவும்.

21. பெரிய கோரோசனை குளிகை:- மண்டைக்குத்து, நீர்தோடம், மயக்கம், வாந்தி, சளி, இருமல், முட்டு, கப சுரம்.
அளவு 1—3 குளிகை.
குடிநீர் — இஞ்சி, உள்ளி, கற்பூர வள்ளி, முலைப்பால், தேன்.

22. அதிமதுரப் பாணி:— இருமல், சளி, வாயவியல், தொண்டை அவியல், நாக்கவியல், குரல் கம்மல் தீரும்.
அளவு 5—15 மி லீ. 3 தரம்.

23. சித்தசிவாமிர்தப் பாணி:- நித்திரையின்மை, மெலிவு, சூடு, விந்துநீர்த்தல், மறதி தீரும்.
அளவு:- 15 — 30 மி. லீ.

24. இராமபாண குளிகை, தீரும் நோய்:— காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல், கிருமிகளால் உண்டாகும் வேறு காய்ச்சல்கள்.
அளவு 1 — 4 குளிகை 3 தரம்,
குடிநீர் — சுக்கு, மல்லி, சீந்தில், வேப்பம்பட்டை, நிலவேம்பு, பற்பாடகம், பேய்புடோல்.

25. காக்கணவன் கோரோசனை குளிகை. தீரும் நோய்:— சிறுவர் கிரந்தி, அவியல், கரப்பன், சளி. மலச்சிக்கல், காய்ச்சல்,
அளவு:- 1 — 3 குளிகை 3 தரம்.
குடிநீர்:- கற்பூரவள்ளி, துளசி, வெற்றிலை, முலைப்பால்.

26. அத்திக்காடி, தீரும் நோய்:— இரத்த மூலம் பெரும்பாடு இரத்தக் கழிச்சல், சலத்தில் இரத்தம் போதல்,
அளவு:- 15—30 மி. லீ. 3 தரம்.

27. தென்னங்கள்ளு காடி, தீரும் நோய்:— பாண்டு, காமாளை, அசீரணம், வயிற்றுப் பொருமல், வாய்வு, பெருவயிறு.
அளவு:- 15—30 மி. லீ. 3 தரம்.

28. பனங்கள்ளு காடி, தீரும் நோய்:— பாண்டு, காமாளை, பெருவயிறு, ஈரல்கட்டி, ஈரல் வீக்கம், மண்ணீரல் வீக்கம், நீராமை, பெலயீனம், உடல் வீக்கம் தீரும்.
அளவு:- 15 — 30 மி.லீ. 2 தரம்.

29. தேற்றாங்கொட்டை லேகியம்:— சலச்சூடு உடற்சூடு, விந்துநீர்த்தல், பலவீனம், ஆண்மைக் குறைவு, வெள்ளை, வெட்டை தீரும்.
அளவு:- 1 தேக்கரண்டி 2 தரம்,
குடிநீர்:- பசுப்பால்.

30. உடன்காய மருந்து:— உடன் காயங்களுக்கு வெளிப்பாவனை.

சத்துகள்

அளவு:- எல்லாச் சத்துகளும் 1:4 பங்கு ர் கலந்து பாவிக்க வேண்டும்.
சாதாரண சிறுவர்களுக்கு:- 1 மி.லீ.
வளர்ந்தோருக்கு:- 2 மி. லீ.

31. பிரமி தீரும் நோய்கள்:— நீர் சுருக்கு, கீல்களில் வலி.

32. நெருஞ்சில். தீரும் நோய்கள்:— நீரடைப்பு, சுரவாதம், கல்லடைப்பு, முட்டு. வாதம், பிரமேகம், வெள்ளை, வெப்பம்,

33. தூதுவளை. தீரும் நோய்கள்:— காது மந்தம், திரிதோஷம், அக்கினி

மந்தம், இரைப்பு, விந்து நட்டம், நமைச்சல், இருமல், பெருவயிறு, உட்குத்து.

34. கற்பூரவள்ளி, தீரும் நோய்கள்:— இருமல், கபம், வாதக்கடுப்பு, அம்மைக் கொப்புளம்.

35. கீழ்க்காய்நெல்லி, தீரும் நோய்கள்:— வயிறு மந்தம், இரத்தக் கழிச்சல், நீரிழிவு, கண்நோய், வெப்பநோய்.

36. அத்திப்பட்டை, தீரும் நோய்கள்:— பெண்களுக்கு ஏற்படும் உதிரப் பெருக்கு, சகல இரத்தப்போக்கு.

37. இலவங்கப்பட்டை, தீரும் நோய்கள்:— சன்னி, நடுங்கல், வாய்நாற்றம், பல்லீற்றின் சுரப்பு, பல்வலி, சிலந்தி, பாம்பு விஷம்.

38. கருவேப்பிலை, தீரும் நோய்கள்:— வயிற்றுளைவு, மந்தபசி, பித்தம், வாந்தி, ஓங்காளம், குடலில் வறட்சி.

39. சிறுநாகம் பூ, தீரும் நோய்கள்:— இரைப்பு, இருமல், கண் புகைச்சல், நடுக்கல், வாதரோகங்கள், வெகு மூத்திரம், வெப்பு.

40. பேய்ப்புடல், தீரும் நோய்கள்:— காமாளை, தாகம், மயக்கம், இரத்த சுத்தி.

41. மாசிப்பு, தீரும் நோய்கள்:— புண்கள், வாய்நாற்றம், இரத்த பித்தம், இருமல், குன்மம், மலக்கிருமி, சூலை

42. வில்வம் பழம், தீரும் நோய்கள்:— சீதபேதி, நெஞ்செரிவு, மூலம், பித்த ஓங்காளம், மந்தம்.

43. வாய்விடங்கம், தீரும் நோய்கள்— பாண்டு, குட்டம், குன்மம், வாயு, நாசி, சிரசு இவைகளில் உள்ள சன்னக் கிருமி.

44. விஷ்ணு கிராந்தி, தீரும் நோய்கள்— கபம், உட்சூடு, சோகம், இருமல் வாதசம்பந்த பிணிகள் நீங்கும்.

45. தேங்காய்ப்பூக்கீரை, தீரும் நோய்:— மூத்திரச்சிக்கல், வாதமூத்திரக்கிரிச்சரம், வெள்ளை, வெட்டை, வீக்கம், வாதம், கல்லடைப்பு, முக்குற்றம்.

46. சாத்தாவாரி, தீரும் நோய்:— சுரம், வெள்ளை, உட்சூடு, கரப்பான், கைகால் எரிவு, எலும்புருக்கி, தாதுபலவீனம்.

47. காக்கணவன் வேர், தீரும் நோய்:— மலக்கட்டு, மாந்தம், பெருவயிறு, கண்ணோய், தலைநோய், சுரம், வெள்ளை, மாந்தம்,

48. மஞ்சிட்டி, தீரும் நோய்:— வெள்ளை, விந்துவைப் பலப்படுத்தும், ஈரலுக்கும், பீளிக கண்டங்களுக்கும் வலுவை உண்டாக்கும்.

49. பொடுதலை, தீரும் நோய்:— இருமல், சீதபேதி, சூலைநோய், வாதநோய், வெள்ளை, இரத்த மூலம், தேகம் பலக்கும்.

50. முடக்கொத்தான், தீரும் நோய்:— பாண்டு, குட்டம், குன்மம், வாயு, வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, பல்வலி.

51. பூச்சுத்தூள்:— வாதம், வீக்கம், உளைவு, தேமல், பருக்கள், அவியல் தீரும். வெளிப்பாவனை வென்னீரில் அல்லது தேங்காய் நெய்யில் அல்லது மூலிகை சாறுகளில் குழைத்துப் பூசலாம் அல்லது கொதிப்பித்துப் பூசலாம்.

வைத்திய கலாமணி
(செல்வி) அ. தாட்சாயினி
உற்பத்தி முகாமையாளர்
கூட்டுறவு மருந்துச்சாலை

# சித்த வைத்திய சுகாதார சேவை விபரம்

**செல்வி. த. இந்துமதி**
**சுகாதார தொண்டர், கரவெட்டி**

| | இடம் | பெயர் | ப. தெ. கூ. சங்கம் |
|---|---|---|---|
| 1. | இலந்தைக்காடு | செல்வி த. இந்துமதி | கரவெட்டி |
| 2. | அல்லாரை | ,, சு. வனிதா | கொடிகாமம் |
| 3. | வேம்பிராய் | ,, மு. தயா | அச்சுவேலி |
| 4. | ஈவினை | ,, து. றஜனி | சுண்ணாகம் |
| 5. | முசிறி | ,, கி. குமணகா | சாவகச்சேரி |
| 6. | இணுவில் | ,, இ. யோகேஸ்வரி | கோண்டாவில் |
| 7. | கட்டுடைமுகாம் | ,, க. புஸ்பரஞ்சிதம் | தெல்லிப்பளை |
| 8. | அச்செழு | ,, பே. மித்திரா | கோப்பாய் |
| 9. | கெருடாவில் தெற்கு | ,, ந. செந்தமிழ்செல்வி | பருத்தித்துறை |
| 10. | குளமங்கால் | ,, செ. ஜெயமலர் | சுண்ணாகம் |
| 11. | தொண்டமனாறு வடக்கு | ,, கு. வனிதா | பருத்தித்துறை |
| 12. | புலோப்பளை | ,, வெ. சுகந்தி | பளை |
| 13. | வெள்ளம் போக்கட்டி | ,, சி. ஜெயந்தினி | கொடிகாமம் |

# சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம்

## தொண்டர் பயிற்சியாளர்கள்

| | பெயர் | ப. தெ. கூ. சங்கம் |
|---|---|---|
| 1. | செல்வி மு. நாகேஸ்வரி | சாவகச்சேரி |
| 2. | ,, ப. மாலதி | கரவெட்டி |
| 3. | ,, சி. இரஞ்சினி | சங்கானை |
| 4. | ,, அ. அருஞ்சலா | ,, |
| 5. | ,, சி. கிருஸ்ணவதனி | கோண்டாவில் |
| 6. | ,, யோ. அஜந்திமாலா | பண்டத்தரிப்பு |
| 7. | ,, க. கமலாம்பிகை | மானிப்பாய் |
| 8. | ,, ச. கங்காதேவி | மானிப்பாய் |
| 9. | ,, நா. மாலதி | கோப்பாய் |
| 10. | ,, சே. காந்தினி | சுண்ணாகம் |
| 11. | ,, மா. சுபர்ணா | வடமராச்சி கொத்தணி |
| 12. | ,, பொ. றஜிதா | கொடிகாமம் |
| 13. | ,, பொ. கவிதா | அச்சுவேலி |
| 14. | ,, ந. ஸ்ரீதேவி | கோண்டாவில் |
| 15. | ,, றகுணா | பருத்தித்துறை |
| 16. | ,, சோ. வாசுகி | பளை |
| 17. | ,, ஆ. சந்திரவதனி | துணுக்காய் |

# சித்த மருந்தாளர் விபரம்

| பெயர் | ப. தெ. கூ. சங்கவிற்பனை நிலையங்கள் |
|---|---|
| 1. திரு. V. T. ஆனந்நன் | அச்சுவேலி |
| 2. சி. மேரிபிளசிடா | யாழ் கொத்தணி |
| 3. திருமதி. கௌ. சசிரேகா | அரியாலை |
| 4. செல்வி. நா. பாலநந்தினி | கரவெட்டி |
| 5. செல்வி. இ. ஜீவதேவி | பருத்தித்துறை |
| 6. திருமதி தி. விஜயஸ்ரீ | சாவகச்சேரி |
| 7. திருமதி. வி. சரோஜாதேவி | கொடிகாமம் |
| 8. செல்வி. இ. சிவநந்தினி | பளை |

## மருந்தாளர் பயிற்சியாளர்

1. செல்வி இ. மெர்லின் றோஸ்
2. ,, செ சரோஜினிதேவி
3. ,, அ. றெசிந்தா
4. ,, பரமேஸ்வரி
5. ,, வி. கவிதா
6. ,, வீ. குணசித்திரா
7. ,, ச. இராசமலர்
8. செல்வி சி. மேசிகெங்கா
9. ,, க. பவகுகன்
10. ,, க. ஜெயசாந்தா
11. ,, சி. வசந்தாதேவி
12. ,, இ. சுபாஜினி
13. ,, இ. சுமதி
14. ,, பு. மயூரசி
15. ,, க.வாசுகி
16. ,, த. றகுனா
17. ,, நா. ரூபாதேவி
18. ,, மு. றிஜிதா

# சித்த வைத்திய மரபு

திருமதி தி. விஜயசிறி,
சித்த மருந்தாளர், சாவகச்சேரி ப. தெ. கூ. சங்கம்

சித்த மருத்துவம் தமிழருடைய பாரம்பரிய மருத்துவ முறையாகும். இதனை சிவபெருமான் பார்வதி தேவிக்கும், நந்தியெம்பெருமானுக்கும், அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும் ஏனைய சித்தர்கள் அரசர்களுக்கும், வைத்தியர்களுக்கும் போதிக்கப்பட்டு வந்த வைத்திய முறை தான் சித்த மருத்துவம் என வரலாறுகள் கூறுகின்றன. இது சித்தர்களினால் பேணி வளர்க்கப்பட்டு வந்தமையினாலே சித்த மருத்துவம் என அழைக்கப்படுகிறது. இம் மருத்துவம் பல பண்புகளைக் கொண்டுள்ளது.

உடலானது மூன்று உயிர்த்தாதுக்களாலும் பத்து உடற்தாதுக்களாலும் ஆக்கப்பட்டுள்ளது. இவை ஐந்து கருப் பொருட்களால் ஆனவை. இயற்கையோடு அமைந்த மூலிகைகளைச் சித்த மருத்துவம் மையமாகக் கொண்டிருப்பதனால் உடலுக்கு தீங்கு விளைவிக்காத வைத்திய முறையாகும். அத்துடன் படிப்படியாக நோயைக் குணமாக்கி அறவே இல்லாது ஒழிக்கின்றது. மாற்று மருத்துவ முறைகள் நோயை திடீரென முறிப்பதனால் உடலில் உயிரணுக்கள் அழிந்து திரும்பத் திரும்ப நோய் ஏற்பட வழிவகுப்பதுடன் உடலை பலவீனமடையச் செய்கின்றன. இதனால் சித்த வைத்தியம் உடலைப் பேணும் பண்புடையது என்பதை அறியலாம். நாட்பட்ட நோய்களையும் நீக்கும் வல்லமையுடையது எமது வைத்தியம்.

நோயை அதிகரிக்கச் செய்யும் பதார்த்தங்களை நீக்கி முறிக்கும் பதார்த்தங்களை உணவில் சேர்த்து பத்தியத்தைக் கடைப்பிடிக்கும் முறை இங்கு காணப்படுகிறது. இதனால் உடலில் ஏற்படும் பலவித தாக்கங்களைத் தவிர்த்து சுகநிலை பேணப்படுகிறது. பொதுவாக மருந்துகள் யாவும் பதார்த்தங்களைச் சேர்த்தே உருவாக்கப்படுகின்றன. அதாவது தாவரவர்க்கம், சீவவர்க்கம், தாதுவர்க்கம் ஆகும். இப்பதார்த்தங்கள் அன்றாடம் மனிதனுடைய உணவுடன் சேரும் பொருட்களாகையால் உடலுடன் ஒன்றுபட்டு நோயைக் குணமாக்குகின்றன.

சித்த மருத்தம் முக்கியமாக நான்கு கால்களைக் கொண்டது. அதாவது வைத்தியன், மருந்து, பரிசாரகன், நோயாளி ஆகும். இவை வைத்தியனின் கடமை, மருந்தின் குணங்கள், பரிசாரகனுடைய கடமை, நோயாளியினுடைய கடமை எல்லாம் எவ்வாறு அமையவேண்டும் என்பதை விபரிக்கும் ஒரு பண்புள்ள வைத்தியமாகும்.

சித்த வைத்தியம் 14 சிகிச்சைப் பிரிவுகளைக் கொண்டது. 64 மருந்துகள் உள்ளன. இவை உள் மருந்து 32, வெளிமருந்து 32 ஆகும். மணி மந்திர அவிழ்தம் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. மானிட மருத்துவம், தேவ மருத்துவம், இராட்சத மருத்துவம் ஆகிய மூன்று பிரிவுகளை உடையது.

சித்த மருத்துவத்தில் நோய் வராது தடுக்கும் மருந்துகள், வந்தால் நீக்கும் மருந்துகள், உளப் பிணிகளை நீக்கும் மருந்துகள் சேதங்களை, பாதிப்புக்களைப் போக்கி மீண்டும் பழைய நிலைக்கு வர நிறைப்பு மருந்துகள் காணப்படுவது மிகச் சிறந்த பண்புகளாகும்.

# கல்விமான்களின் கருத்துக்கள்

## பேராசிரியர் அ. துரைராசா

*துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்*

தமிழினத்தின் தனித்துவமான தமிழ் மொழியில் எழுதப்பட்ட கலை சித்த மருத்துவமாகும். சித்த மருத்துவத்துறையை வளர்ப்பதற்கு இவ்வாறான ஆராய்ச்சி நிலையம் அவசியம் தேவை. எமது பகுதியில் உள்ள மூலிகைகளை ஆராய்ச்சி செய்து பல மருந்துகளை புதிதாகப் பெற்றுக் கொள்வதற்கு இவ்வாராய்ச்சி நிலையம் ஊக்கமளிக்க வேண்டும். சித்த வைத்தியர்களே உள்ளூரில் உள்ள மக்களிற்கு கூடுதலான சேவை ஆற்றி வருகின்றார்கள். மேல்நாட்டு வைத்தியத்துறையுடன் போட்டி போடக் கூடியதாக எமது சித்த வைத்தியம் வளர இந்த சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் பல வழிகளாலும் முன் நின்று உழைத்து எமது மக்களிற்கு உதவி செய்ய முடியும். வைத்தியப் பேரறிஞர் தமது ஆராய்ச்சிகள் அபிவிருத்திகளினால் சித்த வைத்தியம் நிச்சயமாக மீண்டும் உன்னத நிலைக்கு வரும்.

*27-10-93 சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தை யாழ்ப்பாணத்தில் மீண்டும் திறந்து வைத்து ஆற்றிய உரையின் ஓர் பகுதி*

## திரு- வ. கந்தையா

*விஞ்ஞானமாணி, இளைப்பாறிய அதிபர், மகாஜன கல்லூரி, தெல்லிப்பளை*

தமிழரது சித்த மருத்துவம் தனித்துவம் வாய்ந்ததாகும். மருத்துவ சிறப்புக்கள் கொண்ட வைத்தியப் பேரறிஞர் பாலசுப்பிரமணியம் சித்த மருத்துவ மேம்பாட்டுக்காக அயராது உழைத்து வருகிறார்.

*29-8-93 சித்த வைத்திய கருத்தரங்கு யாழ். இந்துக் கல்லூரி ஆற்றிய உரையில் இருந்து*

## கலாநிதி, சஞ்சீவி க. கனகராசா

*மில்க்வைற் அதிபர்*

நாம் சுகதேகிகளாக வாழ வேண்டுமென்றால் மூலிகைகளை பயன்படுத்தவேண்டும். டாக்டர் பாலசுப்பிரமணியம் முயற்சியினாலே யாழ். மாநகர சபையில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்பட்டது போல சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் அமைக்க வேண்டியது அவசியம் என்றார்.

*29-8-93 யாழ். இந்துக் கல்லூரி சித்த வைத்திய கருத்தரங்கில்*

## திரு. செ. சிறினிவாசன்

*பிரதேச செயலாளர், கூட்டுறவு பிரதி ஆணையாளர், வடமாரட்சி தெற்கு மேற்கு*

விஞ்ஞானம் முன்னேறி விட்ட காலத்திலே கூட வைத்திய கலாநிதி பாலசுப்பிரமணியம் கூறியது போல சித்த மருத்துவம் சாதனை படைக்கக் கூடியது. சித்த மருந்துகள் மூலம் சுகாதாரத்தைப் பேணி வந்தால் தீய பக்க விளைவுகள் அற்ற ஆரோக்கியமான சமுதாயமாக எம் மக்கள் திகழுவார்கள்.

*18-5-94 வல்வெட்டி சித்த வைத்திய சுகாதார விழாவில் ஆற்றிய உரையில் இருந்து*

## திரு. இராமலிங்கம்

*செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி*

நாம் உள்ளூரில் உள்ள மூலிகைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கோபாம் சித்த மருந்துகளையே பாவித்து வருகிறோம். இந்த கஷ்ட காலத்திலும் எமது நோய்களை குணப்படுத்துவதில் கோபாம் மருந்துகள் சிறப்பாக சேவையாற்றி வருகின்றன.

*18-5-94 வல்வெட்டி சித்த வைத்திய விழாவில் ஆற்றிய உரையில் இருந்து*

## திரு. சு. டிவகலால

*உதவி உள்ளூராட்சி ஆணையாளர்*

கோபாம் மருந்து உற்பத்திகளை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் 83 ம் ஆண்டு தொடக்கம் மருந்துகள் அனுப்பப்படா நிலையில் கோபாம் மருந்து உற்பத்தி செய்து விநியோகிக்கும் பனை தென்னை கூட்டுறவுச் சங்கங்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். எமக்கு இம் மருந்துகளின் தரம் பற்றிக் கூறக் கூடிய தகுதியில்லை. அதற்கும் நாம் ஒழுங்குகளைச் செய்துள்ளோம். உள்ளூராட்சி வைத்தியர்கள் தான் அதனை செய்துவருகிறார்கள். வைத்திய கலாநிதி பாலசுப்பிரமணியமும் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி. சபாரட்ணம் அவர்களும் கிராமந் தோறும் சித்த வைத்திய சுகாதார சேவைகளை நடாத்தி வருவதை நான் சமீபத்தில் கண்டேன் இந்த சூழ்நிலையில் அது மிகவும் வரவேற்கத்தக்கது. மேலும் அவர்கள் கிராமம்தோறும் கோபாம் மருந்து விற்பனை நிறுவனங்களை ஆரம்பித்து வருகின்றார்கள்.

**30.4.94** — *சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யாழ்நகர சபை நடைபெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டவை*

# மேல்நாட்டு வைத்திய அறிஞர்களின் பார்வையில்

## பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன்

*பதில் பீடாதிபதி, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்*

சித்த மருத்துவர்கள் மருந்துகளை உட்கொள்ளாமலே உணவினூடாக மூலிகைகளையும் அருந்துவதன் மூலம் நோயேற்படுவதைத் தடுத்து வந்தார்கள். சித்த மருத்துவத்திலுள்ள மருந்துகளின் நோய் தீர்க்கும் ஆற்றலை விஞ்ஞான ஆய்வுகள் அறிமுகப் படுத்தப்படுவதற்கு முன்னரே சித்தர்களால் அறியப்பட்டிருக்கின்றன. மூலிகைகளை மேலைத்தேய முறையைப் போல நோய் நீக்கும் மூலக்கூறுகளை பிரித்து எடுத்துத்தான் உபயோகிக்க வேண்டுமென்பது அவசியமில்லை.

*29-08-93 சித்த மருத்துவக் கருத்தரங்கில் கூறியது*

## வைத்திய கலாநிதி செ. நச்சினார்க்கியன்

*விரிவுரையாளர், சமூக மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்*

சித்தர்களால் ஆக்கப்பட்ட வைத்திய முறை நிச்சயமாக சிறந்ததாகத்தான் இருக்கும். மேல் நாட்டு வைத்தியர்கள் மீண்டும் சித்த மருத்துவம் உன்னத நிலைக்கு வர வேண்டுமென்றே அவாவுறுகிறார்கள். சில நோய்களை முற்றாக நீக்குவதில் சித்த வைத்தியத்தில் நிச்சயம் பரிகாரங்கள் இருக்கின்றன. எங்களுக்கு கை கொடுத்து உதவக் கூடிய சித்த வைத்திய முறையை வளர்த்து எடுப்பது எமது எல்லோருடைய கடமையுமாகும். மனித இன மேம்பாட்டுக்கு சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சிகளை மேற் கொண்டு உதவ வேண்டும்.

*27-10-93 மருந்தாளர் பயிற்சியை ஆராய்ச்சி நிலையத்தில் ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரையில் இருந்து*

## வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை

*மாவட்ட வைத்திய அதிகாரி, ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை*

மூலிகை மருந்துகளை நாமும் பாவிக்கிறோம். சில ஆங்கில மருந்துகளில் தீய பக்க விளைவுகளும் உண்டு. மூலிகை மருந்துகள் பக்க விளைவுகள் இல்லாதது. வைத்திய கலாநிதி பாலசுப்பிரமணியம் கூறியது போல மது மேகத்திற்கு சீந்தில் சிறந்த மருந்தாகும். கோபாம் முயற்சிகள் சுகாதாரத்தைப் பேணுவதில் வெற்றியடைய வேண்டும். வைத்தியன் சேவை மனப்பான்மை உடையவனாக இருக்கவேண்டும். வட்டத்துத்தி மூலநோய்க்கு சிறந்த மருந்து. மூட்டுக் காய்ச்சலுக்கு மரமஞ்சல் சீக்கிரம் குணம் கொடுக்கிறது. வேப்பம் பட்டை மலேரியாக் காய்ச்சலுக்கு தடுப்பு மருந்தாக பயன்படுகிறது. எமது வைத்தியசாலைகளில் மூலிகைகளை வளர்ப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்துகிறோம்.

*18 05-94 வல்வெட்டியில் சித்த வைத்திய சுகாதார சேவையை ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரையின் பகுதி*

## வைத்திய கலாநிதி சி. தம்பித்துரை

*வைத்திய அதிகாரி, அரசினர் வைத்தியசாலை, மிருசுவில்*

இந்த சித்த வைத்திய சுகாதார சேவையைப் பற்றி உலகில் வேறெங்கும் காணவில்லை, இது ஓர் பூரணமான ஒருங்கிணைந்த சுகாதார சேவையாய் இருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இங்கு தயாரிக்கப்படும் மருந்துகளைக் கொண்டும் இங்கு காணப்படும் மூலிகைகளைக் கொண்டும் சித்த வைத்திய சுகாதார சேவைகளை இந்த நெருக்கடியான கால கட்டத்தில் நடாத்தி வருவதற்காக சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்களை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். எமது சுகாதார சேவையாளர்களும் இவர்களுடன் ஒத்துழைத்து கடமையாற்றுவார். இங்குள்ள சுகாதாரப் பிரச்சனைகளில் தேசிய சுகாதார தொண்டர்களுக்கு ஆலோசனைகளை வழங்கவும் உதவிகளைச் செய்யவும் நான் தயாராகவுள்ளேன். நோய்கள் ஏற்பட்ட பின் தடுப்பதிலும் பார்க்க இப்படியான சுகாதார சேவைகள் மூலம் நோய்கள் ஏற்படாது தடுப்பது சிறந்த வழி.

**17-04-94 கொடிகாமம் சித்த வைத்திய சுகாதார சேவை ஆரம்ப விழாவில் ஆற்றிய உரையில் இருந்து**

# புகழ்மிக்க வைத்திய கலாநிதிகள் தெரிவித்தவை

## வைத்திய கலாநிதி வை. பாலகிருஸ்ணன்

கரவெட்டி

நன்பானம் ஒரு உற்சாகத்தை தந்திருப்பதனால் உண்மையில் மிகவும் சிறந்த ஒரு பானமாகவுள்ளது. உடலுக்கு நல்ல பானமாகவும் இருக்கின்றது கோபாம் மருந்துகள் நல்ல தரமானவை அவற்றை நான் வரவேற்கிறேன். கோபாம் நீண்ட ஆயுள் பெற்று மக்களுக்கு பெரும் சேவையாற்ற வேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றேன்.

## வைத்திய கலாநிதி S. வேலும்மயிலும்

அல்வாய்

சித்த வைத்தியத்தில் பல ஆராய்ச்சிகளை நிறைவேற்றி மக்களுக்கு பெரும் சேவை யாற்றிக் கொண்டிருக்கும் கலாநிதி பாலசுப்பிரமணியம் அவர்களின் சேவைகளை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். இன்றைய சூழலில் மக்கள் நோயுடனும் போசாக் கின்மையுடனும் வருந்துகின்றார்கள். கோபாம் மருந்துகளைக் கொடுத்து மக்களைக் காப் பாற்றுவோமானால் மருந்துத்தடை அர்த்தமற்றதாகிவிடும்.

18-05-94 கரவெட்டி ப. தெ. கூ. சங்க சித்த வைத்திய சுகாதார விழாவில் ஆற்றிய உரைகளில் இருந்து

## வைத்தியக் கலாநிதி S. மகாலிங்கம்

சுன்னாகம்

இன்றைய சூழ்நிலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடான நேரத்தில் கலாநிதி பாலசுப்பிரமணியம் அவர்களும் ப. தெ. வ கூட்டுறவுச் சங்கங்களும், தி சபாரட்னம் அவர்களும் இணைந்து சித்த மருந்துகளை உற்பத்தி செய்து தனியார் வைத்தியர்களுக்கும் விநியோகித்து வருவதற்காக நான் அவர்களைப் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

சுன்னாகம் ப. தெ. கூ. ச. சித்தவைத்திய சுகாதாரசேவை விழாவில் ஆற்றிய உரையின்பகுதி

## வைத்திய ரத்தினம் பே. பிலிப்பு

சாவகச்சேரி

நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் பொருளாதாரத் தடையினால் நோய் துன்பம் போசாக்கின்மை இத்துர்ப்பாக்கிய நிலையில் சித்த வைத்தியம் மூலம் சுகநலம்பேணுவது ஒரு வரலாற்றுக் கடமை மட்டுமல்ல பிரதான பங்களிப்புமாகும். எமது நாட்டில் இன்று அத்தியாவசியமான பெருந்தொகையான மருந்து வகைகளைத் தயாரித்து விநியோகித்துக் கொண்டிருக்கும் சித்த வைத்தியக் கூ. சங்கத்தை நாம் மனமார வாழ்த்துகிறேன்

கோபாம் அறிமுகப்படுத்திய அந்தப் பானம் மிகவும் திருத்திகரமாக இருந்தது கோபாம் மருந்துகளை நானும் நிறைய வாங்கிப்பாவிக்கின்றேன் மூலிகை தட்டுப்பாடான இக் காலத்தில் கோபாம் எவ்வாறு மருந்துகளை தயாரிக்கின்றது என்பது தெரியவில்லை சித்த மருந்துகள் நிச்சயமாக மலேரியா நோய்க்கு குணமளிக்கக் கூடியவை அவர்கள் பணி வளரவும் இன்னும் தலை சிறந்த மருந்துவகைகளைத் தயாரித்து வழங்கி வளர்ந்து வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

14-05-94 சாவகச்சேரி ப. தெ. கூ. ச. சுகாதார விழாவில் ஆற்றிய உரையி எடுக்கப்பட்டது.

## வைத்தியக் கலாநிதி எஸ். திருநாவுக்கரசு

*முன்னாள் முதுநிலை விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம், கைதடி*

எருமைத் தயிர் உணவாகப் பயன்படுத்துபவர்களுக்கு மதுமேகம் அரிதாகக் காணப் படுகின்றது. எல்லா வருத்தங்களுக்கும் வைத்தியரிடம் செல்ல வேண்டியதில்லை. சிறு சிறு வருத்தங்களுக்கெல்லாம் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கக் கூடிய விதத்தில் தொண்டர்கள் பயிற்சி பெற்றிருப்பதை அறிந்து நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

*14-5-94 சாவகச்சேரி ப. நெ. கூ. சங்க சுகாதார விழாவில் ஆற்றிய உரையில் ஒரு பகுதி*

## வைத்தியக் கலாநிதி பொ. சண்முகரத்தினம்

*வைத்திய அதிகாரி வேலணை பி. ச.*

தலைவர் சபாரத்தினமும், கலாநிதி பாலசுப்பிரமணியமும் சேர்ந்து வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கு சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கம் மருந்துகள் தயாரித்து விநியோகிப் பதை நான் பாராட்டுகின்றேன்.

*30-8-93 யாழ் இந்துக்கல்லூரி சித்த வைத்தியக் கருத்தரங்கில்*

## வைத்தியக் கலாநிதி திருமதி ஞா. பவானி

*பிரதித் தலைவர், சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்*

கோபாம் நிறுவனம் மருந்துகளை தர நிர்ணயம் செய்து விநியோகித்து வருவது நல்ல முயற்சி ஆகும். கோபாம் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவை. மருந்துகளை எவ்வளவு காலம் பாவிக்கலாம் என்பதை அறிந்து கொள்ள தயாரிக்கப்பட்ட திகதி குறிப் பிடுதல் பிரயோசனமாக இருக்கும்.

*29 8-93 யாழ். இந்துக் கல்லூரி சித்த வைத்தியக் கலந்துரையாடலில் உரையின் பகுதி*

## வைத்தியக் கலாநிதி பூ. உரோமகேசுவரன்

*வடக்கு கிழக்கு மாகாண ஆயுர்வேத பணிப்பாளர் பார்வையில்*

கோபாம் மருந்து உற்பத்தியை நான் பார்வையிட்ட பொழுது கோபாம் மருந்து கள் சிறந்த தரமாக உள்ளன என்பதை நான் கண்டறியக் கூடியதாக இருந்தது. இன்று உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டத்தில் கோபாம் மருந்துகள் தரமானவை அதனை எல்லா உள்ளூராட்சி வைத்தியசாலைகளும் கொள்வனவு செய்ய வேண்டும் என்பதை நான் வலியுறுத்தினேன். ஆங்கில மருந்துகளை பயன்படுத்தும் போலி உண்ணாட்டு மருத்துவர்களை இனங்கண்டு ஒதுக்க வேண்டும். இந்தியாவிலே ஆங்கில மருத்துவர்கள் சித்த, ஆயுர்வேத மருந்துகளை பாவிக்கிறார்கள். இலங்கையில் அந்த நிலைமையை கோபாம் உருவாக்க வேண்டும். சித்த மருத்துவர்கள் ஆங்கில மருந்துகளை பாவிப்பதற்கு சித்த மருந்துகளில் அவர்கள் போதிய கல்வி அறிவு பெறாமையே காரணமாகும்.

*30-4-94 கோண்டாவில் சுகாதார விழா*

சித்த மருத்தாளர் பயிற்சியை உலகில் வேறு எங்கும் காணப்படவில்லை. வேறு எவரும் வழங்கவில்லை. இதனை நடாத்துகின்ற ஆராய்ச்சி நிலையத்தின் தலைவரை நான் பாராட்டுகின்றேன். எமது மண்ணிலே நடக்கின்ற ஒரு புரட்சி இதுவாகும்.

சித்த மருத்துவ முறை சீரழிந்து போனதற்கு முக்கிய காரணம் எமது மருந்துகளை விற்பனை செய்யும் கடையிலுள்ள தொழிலாளருக்கோ, உரிமையாளருக்கோ இம் மருந்துகள் பற்றிய விபரம் தெரியாது. சித்த வைத்தியத்தை இன்று பல விதங்களில் வளர்ப்பதற்கு காரணகர்த்தாவாக இருப்பவர் உங்கள் தலைவர் வைத்திய கல நிதி பாலசுப்பிரமணியம் ஆவர். சமீபத்தில் இந்தியா சென்ற போது அங்கு சித்த வைத்திய மரபு இல்லை என்பதைக் கண்டேன். இன்றைக்கு யாழ்ப்பாணத்திலே இங்கு சித்த வைத்திய மரபை காணக் கூடியதாக உள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

*6-5-94 மருந்தாளர் சான்றிதழ் வழங்கும் விழா சித்தா வைத்திய ஆராச்சி நிலையம்*

## சங்கங்களின் பார்வையில்

*சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் தலைவர்*

## திரு. பொ. சின்னராசா

*அவர்கள் கூறியதாவது*

தமிழர் மருத்துவமாகிய சித்த வைத்தியத்தில் சிறந்த அம்சங்கள் பல உள்ளன. சித்த வைத்தியக் கூட்டுறவு சங்கத்திலே ஒரு இயக்குனர் ஆக இருந்து வருகின்றேன். எமது தேகநிலை மோசமடைந்த பொழுது பல காலமாக ஆங்கில மருந்துகளில் சிகிச்சை பெற்று வந்தேன். சுகமடையவில்லை. கடும் பத்தியத்துடன் சித்த மருத்துவம் செய்து வருகிறேன். தேகநிலை சுகமாகி வருகின்றது. இதற்காக எங்களது வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்களது சேவையை மெச்சிப் பாராட்ட வேண்டியுள்ளது. சித்த வைத்தியத்தை நீங்களும் பயன்படுத்தி உங்கள் தேக சுகத்தைப் பேண வேண்டும். கத்தி வெட்டினால் கூட உடன் காயத்திற்கு மருந்து உண்டு தேவைகளுக்கு ஏற்ப மருந்துகளை உற்பத்தி செய்து வருகின்றார்கள்.

*வாழ்க சித்த மருத்துவம்*

*14-5-94 சாவகச்சேரி கருத்தரங்கு*

## திரு. சி. கந்தசாமி

*தலைவர், வலிகாமம் ப. தெ. அ. கூ. ச. கொத்தணி*

எங்களுடைய சங்கங்கள் சித்த மருந்துகளை உற்பத்தி செய்தன, விற்பனை செய்தன மூன்றாவது படியாக இன்று எமது மக்களின் சுகாதாரத்தைப் பேண நடவடிக்கை எடுத்து வருகின்றன. எமது உற்பத்திகளில் புதிதாக மருந்து உற்பத்தியை செய்து வருகின்றோம். எமது மகளிர்களுக்கு சித்த மருத்துவத்துறையில் பயிற்சிகளை வழங்கி வேலை வாய்ப்புக்களை அதிகரித்து வருகிறோம். எமது பெருமதிப்புக்குரிய ஆணையாளர் திரு சபாரட்ணம் அவர்களும் வைத்திய பேரறிஞர் பாலசுப்பிரமணியம் அவர்களும் எங்களுடைய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், சுக நலன்களைப் பேணுவதற்காகவும் எதுவித வசதிகளுமற்ற மிகவும் பின்தங்கிய கிராமங்கள் எல்லாம் சென்று இந்தச் சேவைகளை ஆரம்பித்து வருவதற்காக நாமும் எமது சங்கங்களும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

*15-5-94 தெல்லிப்பளை ப. தெ கூ. சங்க சுகாதாரத் தொண்டர் அறிமுக விழாவில் ஆற்றிய உரையில் இருந்து*

# கோபாம் தயாரிப்புக்கள்

எமது பகுதியில் கோபாம் தயாரிப்புக்களான
சித்த வைத்திய மருந்துகள் நன்பானம் என்பன
கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

★ சத்துணவுக்கூடம், பிரதான வீதி, பருத்தித்துறை.
★ பனையகம், கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டி.
★ கோபாம் விற்பனை நிலையம், பிரதான வீதி, புத்தூர்.

# ஆடை தயாரிப்பு

எமது மகளிர் குழுவால் பெண்களுக்கு தேவையான
அனைத்து ஆடை அணிகளும்
நேர்த்தியாக தைத்து வழங்கப்படுகிறது.

*உங்கள் தேவைகளுக்கு நாடுங்கள்.*

## கொத்தணி மகளிர்குழு ஆடை தயாரிக்கும் நிலையம்

கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டி

வடமராட்சி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
திக்கம் - அல்வாய்

*'மருந்து' சஞ்சிகை*

**மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்ற**
**எமது நல்வாழ்த்துக்கள்.**

★ தேக சுகத்துடனும்
★ ஆயுபலத்துடனும்
★ மகிழ்ச்சியாக வாழவும்

**சித்த வைத்திய கூட்டுறவுச்சங்க மருந்துகளையே**
**உபயோகியுங்கள்.**

தகுதிவாய்ந்த வைத்தியக் கலாநிதி மூலம்
தேவையான வைத்திய ஆலோசனைகளைப்
பெற்றுக்கொள்ள எமது சித்தவைத்திய
நிலையத்தினையும்,
இலவச வைத்திய ஆலோசனைகளையும், இலவச
சித்த வைத்திய மருந்துகளையும் பெற்றுக்கொள்ள
எமது அங்கத்துவ சங்கங்களான சங்கானை,
சுன்னாகம், தெல்லிப்பளை, மானிப்பாய்,
பண்டத்தரிப்பு, கோண்டாவில் ஆகியவற்றின்
நடமாடும் சித்த வைத்திய நிலையங்களையும்
நாடுங்கள் !!!

*சித்த வைத்திய நிலையமும்*
*மருந்து விற்பனை நிலையமும்*
*காங்கேசன்துறை வீதி,*
*தாவடிச்சந்தி, கோண்டாவில்.*

**வலிகாமம் பனை தென்னை**
**வள அபிவிருத்திக் கூட்டுறவுச்.**
**சங்கங்களின் கொத்தணி.**



தமிழீழத்தில் இன்று......
புத்தாக்கி
பல்சுவைகள் மென்பானம்
எமது உற்பத்திகள்:
• ஒறேஞ் பார்லி
• ஒறேஞ் ஸ்பெசல்
• லெமன்
• லெமன் ஸ்பெசல்
• நெக்ரோ
• கிறீம்
• கோப் கோ
• இஞ்சி
• நெல்லி
• ஜாம்
• கம்
தயாரிப்பு: யாழ்ப்பாணம் பனை தென்னை வள -
அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி [வது]

சுகாதாரம், வைத்தியம், பராமரிப்புத் துறைகளில்
தமிழர்தம் தொன்மையையும் ஆற்றலையும்
தன்னகத்தே கொண்டு விளங்குவது

# சித்த வைத்தியம்

★

காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு
தொன்மை வாய்ந்த சித்தவைத்தியம் புதுமைபெற்று
பணிபுரிய முன்வந்திருப்பதை

## ‘மருந்து’

எடுத்து விளக்குகிறது.

★

சித்த வைத்தியத்தின் சீர்மையை
மேலும் சிறப்புறச்செய்யப் பணியாற்றும்

## சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்

வாழ்க! வளர்க!!

★

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

## "நீண்ட ஆயுளுக்கு நிறைந்த ஆரோக்கியம் நிறைந்த ஆரோக்கியத்திற்கு நீண்ட ஆயுள்"




உங்கள் முதல் தெரிவு

**நன்பானத்திற்கே**

சிறப்பம்சங்கள்

* உடலுக்கு ஊட்டம்
* நோய்த் தடுப்பு
* தீங்கற்ற மூலிகைகளின் சேர்க்கை
* நறுமணமும் இன்சுவையும்
* தளராத உற்சாகம்

சகல பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் விற்பனை நிலையங்களிலும் விற்பனையாகின்றது.

(தயாரிப்பு முறை : சாதாரண கோப்பி தேனீர் தயாரிப்பது போன்றதே)

---

கோபாம் மருந்துகள் தரத்தில் உயர்ந்து குணத்திற் சிறந்து விளங்குகின்றன.
உங்கள் மருந்துத் தேவைகளுக்கு மேலும் தாமதிக்காது
"கோபாம்"
மருந்து விநியோக நிலையங்களை நாடுங்கள்.
குளிகை, சூரணம், லேகியம், நெய், எண்ணெய், காடி, பற்பம், செந்தூரம், களிம்பு, பாணி முதலிய சகலவிதமான மருந்துகளையும் தனித்துவமான முறையில் தயாரித்து நீதியான விலையில் விநியோகிப்பவர்கள்

**சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்**

572, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம். 1994